# காஞ்சி

நிறுவனர்: அறிஞர் அண்ணா

மலர்: 10 | திருவள்ளுவராண்டு 2004 கார்த்திகை 3 (18-11-73) | இதழ்: 19


★

உள்ளே......


ஒளிபடைத்த கண்ணினாய்!
(தம்பிக்கு அண்ணாவின் மடல்)

★

மத்திய அரசுக்கு அண்ணா
தரும் மும்முனைத் திட்டம்!
(தலையங்கம்)

★

கவிதைப் பூங்கா

★

மறு வாழ்வு
(குறுநாவல்)

★

மெல்லிய காதல்
(தொடரோவியம்)


★

## எந்நாள்?

பாவேந்தர் பாரதிதாசன்

★

அந்த வாழ்வுதான் எந்நாள் வரும்?
அந்த வாழ்வுதான்
இந்த மாநிலம் முழுதாண் டிருந்தார்
இணையின்றி வாழ்ந்தார் தமிழ்நாட்டு வேந்தர்
அந்த வாழ்வுதான் எந்தநாள் வரும்?

ஒலி என்பதெல்லாம் செந்தமிழ் முழக்கம்;
ஒளி என்பதெல்லாம் தமிழ்க் கலைகளாம்!
புலி, வி்ர், கயல் கொடிமூன்றினால்
புது வானமெங்கும் எழில் மேவிடும்
அந்த வாழ்வுதான் எந்தநாள் வரும்?

குறைவற்ற செல்வம், வாழ்வில் இன்பவாழ்வு
கொண்ட தமிழனுள்ளம் கண்ட தமிழிசை,
பிற மாந்தர்க்கும் உயி ரானதே
பெறலான பேறு சிறி தல்லவே
அந்த வாழ்வுதான் எந்தநாள் வரும்?

★


விலை: 0-25 காசு

# ★ கவிதைப் பூங்கா ★

## எவனடா தமிழன்?

**கவிஞர் பொடியன்**

எவனடா தமிழன்? இழுத்துவா அவனை!!
எவனடா தமிழன்? இங்குவா! ஏ! ஏ!
மானம் உண்டா? மறத்தனம் உண்டா?
ஊன்கொழுத் தவனே! உனக்கேன் மீசை?
சூத்திரப் பயல்களை ஆத்திரப் படுத்தி
கோத்திரக் கொடுமை கொலைபடச் செய்த
தந்தையின் சிலையைத் தகர்த்திட ஓடி
வந்தவன் எவளின் வயிற்றில் பிறந்தவன்?
உருகா மனத்தவர், உலகப் பெரியார்
சிலையைச் சிதைக்க வந்து சேர்ந்தவன்
விலைமகள் மகனா, வீரத் தமிழனா?
திண்டுக் கல்லில் திருட்டுப் பொறுக்கிகள்
அண்டியே வந்துமே அய்யா சிலையினை
உடைத்திட முயன்றபின், உலகிடைத் தமிழன்
இனமென் றுண்டா? எவனிதை ஏற்பான்?
கந்தைத் துணியாய், காய்ந்த இலைகளாய்,
வேட்டி அறியா விலங்காய் மலத்தைக்
கூட்டிப் பெருக்கும் கூட்டமாய் வாழ
இருந்த இனத்தை எழுப்பிய தலைவன்;
பருந்து மனத்தார் பசிக்கு விருந்தாய்
போக இருந்த புன்மைத் தமிழனை
வாகாய்க் காத்து வளர்த்த தந்தை
பெரியார் சிலைக்குப் பிழைசெய வந்த
நரியும், நாயும், நாற்றப் பன்றியும்
ஓட விரட்டிய உயர்ந்தவன் உண்டா?
எண்ணெய் ஊற்றி இணையிலாச் சிங்க
வெண்கலச் சிலையும் வெடித்துச் சிதறிட
நெருப்பை வைத்த நிகழ்ச்சியைக் கண்ட
இதுதமிழ் நாடா? இருப்பின் இச்செயல்
நடக்குமா? தமிழ்மகன் நடக்க விடுவனோ?
உடைக்க இருகை உயரும் போது
கோடிக் கைகள் குலையறுக் காதா?
பேடியர் எனவே பேசா திருந்தால்
அத்தனை பேரும் ஆரியப் பூணூல்
பட்ட மார்பின் பால்குடித் தவர்தாம்!!
சரித்திர வாயும் சர்க்கரை போலே
தரித்திரப் பிறவிகள் தமிழினம் என்று
கூறுமா? இத்தகு கொடுமை நடந்தபின்
எவரைத் தமிழன் என்று சொல்வது?
எதனைத் தமிழகம் என்று சொல்வது?
தமிழகம் இல்லை; தமிழனும் இல்லை;
வீரம் என்பது வெற்றுப் பேச்சே!!
யாரிதை மறுப்பார்!! எவரிதை மறுப்பார்!!
மான இனமென மார்பினைக் தட்டி
வருவார் இருப்பின்; வருக!! உலகில்
தங்கள் வாழ்வினை தாழ்வினைப் போக்க
தள்ளா வயதிலும் தளரா துழைக்கும்
தலைவனின் சிலையைத் தகர்த்ததாய் எந்த
காட்டு மிராண்டியைக் காட்டிட வரட்டும்!!
இதற்கு விடையை எண்ணி
வாதிற் கென்னுடன் வருவோர் வருகவே!!

## அறிஞர் அண்ணா

**புலவர் மெ. ஆண்டவன்**

காஞ்சியிலே தோன்றிநின்ற அறிஞர் அண்ணா
கற்கண்டுத் தமிழாலே சொல்லிவைத்த
வாஞ்சைமிகு கருத்துக்கள் வையகத்தில்
வருந்துகின்ற தம்பியரை வாழவைக்கும்
அரும்புகின்ற தமிழுணர்வு அழிந்திடாமல்
ஆக்கமுற வளர்த்திட்டார் அறிஞர் அண்ணா
அண்ணாவின் தமிழ்ப் பேச்சில் ஊறுகின்ற
அருஞ்சுவையில் தேனுண்டு; பாலுமுண்டு!
இந்நாளில் அன்னார் போல் பேசுதற்கு
எற்றமிகு; அறிஞரிலர் இதுதான் உண்மை.

மாற்றாரும் போற்றும்நல் ஆற்றல் பெற்றார்
மணமிக்க சொல்லழகு வாய்க்கப் பெற்றார்
குணமிக்கார் கோபமிலார் கொள்கைத்தங்கம்
கோடானு கோடிமக்கள் இதயந்தன் னில்
என்றென்றும் வாழுகின்றார் எங்கள் அண்ணா
ஏழையரின் உள்ளங்கள் அவர்தம் இல்லம்
தமிழனுக்குத் தமிழ்ப்பற்றைத் தமிழ்ப்பண்பாட்டை
தந்திட்ட ஆன்றோருள் அண்ணா முன்னர்
என்றுரைக்கும் விதத்தினிலே ஆட்சிகண்டு
இனிநீங்கள் நடாத்திடுக சிறப்பாய் என்று
இன்றுள்ள தம்பியரை நோக்கிச் சொல்லி
எழில்குலுங்க உறங்குகின்றார் வங்கத்தோரம்!

———

## கோவில்கட்டி முடித்தாள்!

**கவிஞர் வில்லிபுத்தன்**

கோவில் கட்டி முடித்தாள்—தமிழ்
குலம் வணங்கும் பழங்
கிழவி...அவ்வை நல்வழி [கோ

பூவில் பிறந்த மணம்போல!—குளிர்
பொதிகைமலைத் தென்றல் நடையாலே!
நாவினிக்கச் சொன்னாள் கனிபோல்!—அந்த
நல்லவளின் பண்பு வாழ்க மண்மேலே! [கோ

ஆத்திச் சூடியெனும் தேன்சோலை!—அருகில்
அறஞ் செயவிரும் பெனும் நிழற்சாலை!
பார்த்துவரும் கொன்றைவேந்தன் மேலே!
—மூதுரை
பனுவல்பன்னீர் தெளிக்கும் வழிமேலே! [கோ

அற்புத ஆலயந்தனைப் படைத்தாள்! மனித
அறிவுக்கு விருந்தாகத் தனைக்கொடுத்தாள்!
கற்பனைக் கருஆலப் பொருள் கொடுத்தாள்!
—அதற்குக்
காணிக்கை பசியென்று துடித்துச் செத்தாள்
பாம்! [கோ

# "காஞ்சி"

ஆண்டுச் சந்தா ரூ. 16 (மலர் உட்பட) ஆறுமாதச் சந்தா ரூ. 8

மலர் 10 | 18—11—73 | இதழ் 19


# மத்திய அரசுக்கு அண்ணு தரும் மும்முனைத் திட்டம்!

## வாட்டம் நீங்கிட நோட்டடித்தால் போதாது!

என்னிடத்தில் பேசியவர்களுக்கு நான் சொன்னேன் 'This is not a budget but a midget'.—என்றேன். குறுகியது என்று சொன்னேன். உண்மையான பட்ஜெட் இங்கே இல்லை என்று சொன்னேன். மத்திய அரசில் ரூ. 290 கோடிக்குத் துண்டு விழுகிற பட்ஜெட் போடப்பட்டிருக்கிறது. எந்த வகையில் சரிக்கட்டப் போகிறுர்கள் என்ற விளக்கம் தரவில்லை. வழக்கமாக செய்வதைப்போல் நோட்டை அச்சடித்தால் மறுபடியும் விலைகள் ஏறும். விலையேற்றத்தைக் கட்டுப்படுத்த வேண்டும் என்ருல் மத்திய அரசின் நடவடிக்கைகளை கட்டுப்படுத்த வேண்டும். திட்டங்கள் ஏற்பட்டபிறகு இரண்டாயிரம் கோடிக்குமேல் சர்க்கார் துறையில் பல தொழிற்சாலைகளில் முதலீடு போடப்பட்டிருக்கிறது. இந்த இரண்டாயிரம் கோடிரூபாயை சர்க்கார் துறையில் போட்டதால் நாம் பெற்றிருக்கிற ஆதாயம் என்ன? இரண்டாயிரம் கோடி ஆதாயம் தராமல் நாட்டிலே உலவுகிறது என்ருல் விலைகள் ஏருமல் எப்படிக் கட்டுப்படுத்தப்படும்? 'பப்ளிக் செக்டார் அண்டர் டேக்கிங்' சரியான முறையில் பலன் தரத்தக்க வழிகளை இந்தப் பதினைந்து வருஷமாகக் கண்டுபிடிக்க வில்லை.

## மும்முனைத் திட்டம்

நிதிநிலை சரிப்பட வேண்டுமென்ருல் மூன்று காரியங்களில் நாம் தமிழக அரசுச் சார்பில் மத்திய அரசுக்குக் கூச்சமில்லாமல் அச்சமில்லாமல் நம்முடைய கருத்துக்களைத் தெளிவாக்க வேண்டும். பப்ளிக் செக்டார் அண்டர் டேக்கிங் மூலமாக நமக்கு ஏற்பட்டிருக்கிற ஆதாயக் குறைவைச் சுட்டிக்காட்டி அதற்குத் தக்க வழிமுறைகளைக் கையாண்டு இரண்டாயிரம் கோடி ரூபாய் முதலீடு செய்ததற்கு வர வேண்டிய அளவுக்கு வருவாய் வருவதற்கு, மத்திய அரசு உடனடியாக நிபுணர் குழு ஒன்று நிறுவி நல்ல முறையில் இயங்கச் செய்யவேண்டும். முன்னல் தொழில் நிபுணர்களை அழைக்கவேண்டும். குறிப்பிட்ட அளவுக்குச் சம்பாதித்த பிறகு, அவர்கள் பணம் வேண்டியதைச் சம்பாதித்தப்பிறகு, புகழ் தேடவேண்டுமென்ற எண்ணம்தான் அவர்களுக்கு வரும். அவர்களை அழைத்து "உத்தியோகம் என்று வரவேண்டாம், சம்பளம் கேட்கவேண்டாம், நீங்கள் கிம்பளம் வாங்காத ஆலோசகராக இருந்து உங்கள் கருத்துக்களைச் சொல்லுங்கள்" என்று சொல்லலாம்.

## உற்பத்திக்கும் விற்பனைக்கும் தொடர்பு உண்டா?

காலமறிந்து பொருள் செய்வது, விலையறிந்து சந்தைக்குக் கொண்டு போவது, நேரமறிந்து கொண்டு போவது, என்ற இந்த மூன்று சாதாரண அடிப்படைக் கருத்துக்களைக்கூட நம்முடைய பப்ளிக் செக்டர் கடைப்பிடிப்பதாகக் தெரியவில்லை. அதனுல்தான் இரும்பு கிடைக்கவில்லை, என்று சொல்லும்போது பிலாயிலும், ரூர்கலாவிலும் இரும்பு விற்கவில்லை, என்ற கூக்குரல் இருக்கிறது. மார்க்கெட்டு நிலவரத்தை அறிந்து சரக்குகளை உற்பத்தி செய்து அதைச் சந்தைக்கு எடுத்துச் செல்லும் அளவிற்கு நம்முடைய "பப்ளிக் செக்டார் அண்டர் டேக்கிங்ஸ்", முறைகளை கையாளவேண்டும். அதை உடனடியாக செப்பனிட்டாலொழிய நம்முடைய பொருளாதாரம் சீர்படாது.

## வலிவைக் குறைக்காமல் செலவைக் குறைத்திடுக

இன்னென்று நம்முடைய இராணுவச் செலவு நிச்சயமாக குறைக்கப்படவேண்டும். இராணுவச் செலவைக் குறைக்க வேண்டுமென்று சொல்லும் போது பாதுகாப்பு குலையவேண்டுமென்ற எண்ணிக் கொள்ளக்கூடாது பாதுகாப்பு கெடாமல், வலிவைத் தேடிக்கொண்டு, ராணுவச் செலவைக் குறைக்க நிறைய வழிவகையிருக்கிறது. அப்படி நான் சொன்னுல் வருத்தமாக இருக்கும். ஆனல் இரண்டு மாதங்களுக்கு முன்னல் மொராஜிதேசாய் அவர்களே சொல்லியிருக்கிருர்கள். There is possibility of Economy without impairing our striking power என்பதை அவர்களேகூட குறிப்பிட்டார்கள்.

## வினைத்திட்டம் என்பது ஒருவன் மனத்திட்டமே

ஆகவே அதில் 100 கோடி ரூபாய் சிக்கனம் ஏற்பட்டிருக்கும் என்று எதிர்பார்த்தேன். ஏற்படவில்லை என்பதைப்பற்றி நாம் உள்ளபடியே வருத்தப்பட வேண்டியிருக்கிறது. அவர்கள் சொன்னபடி சீனுக்காரன் படைக் கண்ணேடு நம்மை நோக்கிக் கொண்டிருக்கும் நேரத்தில், பாகிஸ்தானுக்கும் நமக்கும் இன்னும் பகை நீங்கிடாத நேரத்தில், பாதுகாப்பு வேண்டாமென்று இந்தியாவிலே பிறந்த எந்த குடிமகனும் சொல்லமாட்டான். ஆனல் பாதுகாப்பு செலவு, அந்தத் தொகை, ஏறஏற வலுவு பெருகிவிடும் என்று நாம் எண்ணிவிடக்கூடாது. உதாரணமாக பாகிஸ்தானுக்கும் நமக்கும் நடந்த சண்டையை எடுத்துக் கொண்டால், பாகிஸ்தானின் டாங்கிகள் அதிகவிலை உள்ளவை. நம்மிடம் இருந்த டாங்கிகள் அவ்வளவு அதிகம் விலையுள்ள டாங்கிகள் இல்லை. ஆனல் நம்முடைய போர் வீரர்களின் போராட்டத் திறமையைக் கொண்டு பாகிஸ்தானிடத்திலே இருந்த விலை உயர்ந்த டாங்கிகள் நொறுக்கப்பட்டன. ஒரு இடத்திற்கே பெயர் "Grave yard of tanks" என்று வைத்தார்கள்.

## கோடி கோடியாகக் கொட்டாதீர்கள்

ஆகையால் நாட்டுப் பாதுகாப்பு என்பது, நம்முடைய போர் வீரர்களின் ஆற்றலும், மக்களிடத்திலே உள்ள ஒற்றுமை உணர்ச்சியிலும், கசப்பு உணர்ச்சி நீங்குவதிலும்தான் இருக்கிறது. இந்த வருடம் பாதுகாப்புச் செலவு ரூ 900 கோடி, அடுத்த

வருடம் ஆயிரம் கோடி, அதற்கடுத்த வருடம் ரூ 1500 கோடி, என்று ஏறிக்கொண்டு போவதால் மட்டும் பாதுகாப்பு வலுவடைந்துவிடும் என்று சொல்லமுடியாது. ஆகவே அதில் ஒரு அளவு குறைக்கலாம்.

மூன்ருவதாக, சிக்கன நடவடிக்கை என்பது மாநில அரசுகளிடம் மட்டும் எதிர்பார்த்துக் கொண்டிருப்பதில் எந்தவிதமான பலனுமில்லை. நாம் எவ்வளவு முயற்சி எடுத்தாலும் நம்முடைய சிக்கன நடவடிக்கை அதிக பலனைக் கொடுக்காது.

## மாநிலங்களின் உரிமைகளில் தலையிடுவானேன்?

ஆனுல் மத்திய அரசை எடுத்துக் கொள்ளுங்கள். எவ்வளவு சிக்கன நடவடிக்கைக்கு இடமிருக்கிறது? உதாரணத்திற்குச் சொல்கிறேன். ஒவ்வொரு இலாகாவிலும் எதற்காக அவர்கள் "All India Service" என்ற ஒன்றை காரணமில்லாமல் வைத்துக் கொண்டிருக்கிருர்கள்?

All India Medical Service,

All India Enginineering Service,

All India Educational Service,—என்று வைத்துக் கொண்டிருக்கிருர்கள். இவைகளை எல்லாம் முந்திய அரசு அனுமதித்திருக்கிறது. நாங்கள் பொறுப்பேற்றுக் கொண்ட பிறகு இதையெல்லாம் நாங்கள் ஏற்றுக்கொள்ளப் போவதில்லை என்று எழுதியிருக்கிருேம். நமக்கே முழுக்க முழுக்க உரிமையாக இருக்கிற பல இலாக்காக்களில் அவர்கள் ஈடுபடுகிருர்கள். அதனுல் இரட்டிப்பு செலவு ஆகிறது. அதைக் குறைக்க வேண்டும்.

## எருமை வளர்க்கவும் மத்திய அரசுதானு?

நீங்கள் எல்லாம் கேட்டால் வேடிக்கையாகக் கருதுவீர்கள், மத்திய சர்க்காருடைய மேற்பார்வை யில் நம்முடைய மாநிலத்திலே எருமை வளர்க்க பண்ணை வைக்கப் போகிருர்கள். நான்கு நாட்க ளாக அதற்கு இடம் தேடுகிறேன். இவர்கள் மேற்பார்வையில் எருமைப் பண்ணை; நம்மிடம் அந்த அளவுக்குக்கூட நம்பிக்கையில்லை. எருமைகள் வளர்க்கும் பணத்தை மட்டும் நம்மிடம் கொடுக்கக் கூடாதா? அந்த அளவிற்குக்கூட நம்பிக்கை வைக்கக் கூடாதா? ஏன் அவர்களுக்கு அது வரவில்லை?




## ஏன் இந்த இரட்டிப்பு வேலை

நம்மிடம் அருமையான என்ஜினியரிங் கல்லூரி யிலிருந்து படித்துவிட்டால் வேலைக்கு எங்கே போவது என்கிருர்கள். நிலை அப்படியிருக்கும்போது "Regional" கல்லூரி எதற்கு? மத்திய அரசின் மேற்பார்வையில் கல்லூரி எதற்கு? நாம் செய்யாத எதை அவர்கள் செய்யப்போகிருர்கள்? ஒன்று செய்கிருர்கள். தரமான ஆசிரியருக்கு நாம் வாயைக்கட்டி, வயிற்றைக்கட்டி 500 ரூபாய் சம்பளம் கொடுத்து, "இரு" என்று வைத்துக் கொண்டிருக்கும்போது, அவர்கள் கல்லூரிகளில் 1200 ரூபாய் சம்பளம் என்றவுடன் இவர்களுக்கு நம்மைப் பார்க்கும்போது உடனே கோபம் வருகிறது. இதற்குத்தான் பயன்படுகிறதே தவிர, ஆங்கிலத்தில் சொன்னுல் விளக்கமாயிருக்கும் என்று கருதுகிறேன். Why This Duplication? எதற்கு இந்த இரட்டிப்பு வேலை? இதையெல்லாம் குறைத்தால் நிச்சய மாக மாநிலத்திற்குப் பங்கிடும் தொகை அதிக மாகும்.

## மும்முனைத் திட்டம்

ஆகையால் இந்த மூன்று விஷயங்கள்.

1. Streamling of public sector under takings;
2. Economy in defence expenditure without impairing striking power; and
3. Eradication of the process of duplication in administration

இவைகளைச் செய்தார்களானுல் என்னுடைய சாதாரண கணக்கின்படி 500 கோடி ரூபாய் மத்திய அரசின் செலவிலிருந்து குறைத்து மாநில அரசிற்குப் பங்கிட்டு கொடுக்கும் வாய்ப்பு வரும். அதிலே நம்முடைய நண்பர்கள் ஒத்துழைப்புக் கொடுத்தால் —கிணறுவெட்ட வேண்டுமென்று—கூறினுர்கள்— அதன்படி எவ்வளவு கிணறு வேண்டுமென்ருலும் தோண்டலாம்—பள்ளத்தை மூடவேண்டுமென்று கூறினுர்கள்—அதையும் மூடலாம்.

[1968-ம் ஆண்டு மார்ச் திங்கள் 8-ம் நாளன்று தமிழ்நாடு சட்டமன்றத்தில் பேரறிஞர் அண்ணு அவர்கள் ஆற்றிய உரையின் ஒரு பகுதி இங்கு வெளியிடப்பட்டுள்ளது]

★



# தம்பி,

ஐயாவோட குழந்தை!

எஜமானரோட மகன்!

சின்ன எஜமானரு!

சின்ன ஐயா!

எஜமானரு!

புரிகிறதல்லவா, ஒவ்வொருகால கட்டத்திற்கு ஏற்ற பேச்சு என்பது.

சீமான் இருக்கும்போது அவருடைய மகனை, "ஐயா வோட குழந்தை" என்று அன்புடன் கூறுவர். அந்தக் கட்டத்தில் அன்புகாட்டினுல் போதும் என்று தோன்றுகிறது.

சீமானுடைய பிள்ளை, வாலிபப் பருவமடைந்ததும், அடங்கிக்கிடப்போருக்கு, முன்பு போல அன்புடன் குழந்தை என்று கூறிடக் கூச்சமாக இருக்கிறது; எஜமானரோட மகன்! என்று கூறுகின்றனர். அன்பு போதுமானது அல்ல, என்ற ஓர் உணர்வு; மதப்புக்காட்டவேண்டும் என்ற நினைப்பு. குழந்தை அல்ல, வாலிபன்! அதாவது சீமானுடைய பணப் பெட்டிக்கு அருகே சென்றுகொண்டிருக்கும் நிலை! ஆகவே மதிப்பளிக்க வேண்டி இருக்கிறது.

ஆண்டுகள் சில செல்கின்றன! சீமான் பழைய முடுக்கை இப்போது கஷ்டப்பட்டுத்தான் மேற்கொள்ள முடிகிறது. கர்ஜனையில் கடுமை கலந்திட முடியவில்லை. மகனே? விழியை உருட்டிக் காட்டுகிறுன்! விரைவில் 'பட்டம்' சூட்டிக்கொள்ள இருக்கிருன் என்று தோன்றுகிறது. அப்போது, அன்பு—மதிப்பு—எனும் உணர்ச்சி போதுமானது அல்ல என்று தோன்றுகிறது. அடக்க ஒடுக்கமாகப் பேச வேண்டும் என்று தோன்றுகிறது. சின்ன எஜமானர்! என்று பயம் கலந்த குரலில் பேசத் தலைபடுகின்றனர்.

பத்து நாளாக அவர் வெளியே உலாவச் செல்லவில்லை; பழரசத்தில் மருந்து கலந்து தருகிருர்களாம் களைப்பும் இளைப்பும் போக என்ற முறையில் சீமானைப்பற்றி ஊரார் பேசிக்கொள்ளும் நிலையின் போது, அவர் மகனை 'சின்ன ஐயா' என்று அழைக்கின்றனர்—ஐயா என்பதை அழுத்தி! 'சின்ன' என்ற அடைமொழி அதிக நாட்களுக்குத் தேவைப்படாது என்ற நினைப்புடன்.

சீமான் 'சிவலோகப் பிராப்த' அடைந்துவிடுகிருர்; ஐயா! என்று மரியாதையும் அச்சமும் கலந்த முறையில் அழைக்கிருர்கள்.

ஐயாவோட குழந்தை' என்ற நிலையிலிருந்து 'ஐயா' ஆகிவிட்ட நிலை, சீமானுடைய மகன் வளர்ந்து விட்டான் என்பதைத் தெளிவாகக் காட்டும் அளவுக்கு அவன் 'ஐயா' வேலை பார்ப்பதற்குத் தேவையான தகுதியையும் திறமையையும் பெற்று விட்டான் என்பதைக் காட்டுவதில்லை. தகுதியும் திறமையும் பெற்றிருக்கக்கூடும்; அல்லது மாளிகையும் மாநிதியும் போதும், வேறு தகுதியும் திறமையும் தேடிப்பெற்றிட வேண்டுமோ என்று இருந்து விட்டிருக்கக்கூடும்.

மாளிகையும் மாநிதியும் பெற்றிருப்பதே ஒரு விதமான தகுதிதானே—உலகம் அப்படித்தானே எண்ணுகிறது.

எஜமானர்! ஐயா! பெரியவர்! —என்ற இத்தகைய பட்டம் பல சூட்டப்பட்டவர், சீமான் மகன்—இருபது வயது நிரம்பியவனுகவும், 'எஜமானர்' என்று பணிவுடன் அழைப்பவர் அறுபது வயதான முதியவராகவும் இருக்கக்கூடும்!

வயது இருபது என்ருல் என்ன! இரும்புப்பெட்டி இருக்கிறதல்லவா? முதியவர் அந்த வாலிபனையா எஜமானரே! என்று அழைக்கிருர்? இரும்புப் பெட்டியையும் அதில் உள்ள எண்பது இலட்சியத்



தையும், கரும்புத் தோட்டத்தையும் அது காட்டும் கணக்கினையும்!!

தம்பி! அது ஏழ்மையின் விளைவு.

ஆனால், அரசியல் உலகிலே, ஒருவர் திடீரென 'எஜமானர்' ஆகிவிடும்போதும், இதுபோல 'வளையும் நெளியும்' கூட்டமொன்று கிளம்பிவிடக் காண்கின்றோம்.

உண்மையான அன்பு காரணமாக, எதையும் இழந்திட, எத்தகைய இன்னலையும் ஏற்றிடத் தயாராக உள்ள தூயவர்களைத் தொண்டர்களாகப் பெற்றிடும் வாயப்பினைப் பெற்றிடும் தலைவர்கள் உளர்.

அந்தத் தலைவர்களைவிட தூய்மைமிக்க அந்தத் தொண்டர்களே, பொதுவாழ்க்கைத் துறைக்கு உயிரூட்டம் தருபவர்.

நான், தம்பி! அப்படிப்பட்ட அப்பழுக்கற்ற நற்குணம்கொண்ட தூயவர்களைப்பற்றி அல்ல கூறுவது.

சீமானான உடன் அவனை 'எஜமானர்' என்று கொண்டாடிடுவோர்போல, ஒருவர் அரசியலில் பெரிய பதவியில் இடம்பெற்ற உடன் அவர் முன் நின்று அவர் நாமாவளி பாடுகிறார்களே அவர்களைக் குறிப்பிடுகிறேன்; துதி பாடகர்களை

துதி பாடகர்கள் வரம்வேண்டி புதிய தேவதைமுன் வேண்டி நிற்பதுமட்டுமின்றி மற்றவர்களிடம் மல்லுக்கு நிற்பதும் மற்ற எவரையும் மட்டமாகக் கருதி ஏசுவதும், தமது புதிய எஜமானருக்குத் திருப்தி தரும் என்ற நினைப்பில் இருப்பர்.

தன்னைப் பாராட்டிப் பேசுவதுடன், தனக்கு 'ஆகாதவர்களை' கடுமையாக ஏசுகிறான் என்பதறிந்து அகமகிழ்ந்து, தட்டிக் கொடுக்கும் போக்கினர் உளர்.

'தலைவர்' மகிழ்ச்சி அடைகிறார், தட்டிக் கொடுக்கிறார் என்று தெரிந்தால், தூற்றும் பேர்வழிகளுக்குத் தெம்பும் துணிவும் பன் மடங்கு அதிகமாகிடத் தானே செய்யும். வசைபாடுவதிலே மும்முரமாக ஈடுபட்டு விடுகின்றனர்! அதிலேயே ஈடுபட்டு ஈடுபட்டு, பிறகு வேறு எதற்குமே தகுதியற்றவர்களாகி விடுகின்றனர்.

தம்முடன் உள்ளவர்கள் பிரச்சினைகளை விளக்க வேண்டும். வாதங்களைக் காட்டவேண்டும், புள்ளி விவரத்தைத் தரவேண்டும், பேச்சிலே பொருளும் பொறுப்பும் இருக்கவேண்டும், கண்ணியம் இருக்க வேண்டும் என்று விரும்பிடுவது, ஒரு தலைவரின் தரத்தை மட்டுமல்ல, பொதுத்தொண்டின் தரத்தையே உயர்த்தும்.

அதற்கு மாறாகத் தரம்கெட்ட பேச்சுக்குத் தலையாட்டுவதும் தட்டிக் கொடுப்பதும், தூபமிடுவதுமாக அந்தத் தலைவர் இருந்திடின், என்ன நேரிடும்? சாக்கடைச் சரக்கினை நாக்கிடைகொண்டு, உமிழ்வோரின் தொகை பெருகும், துணிவு வளரும். இன்று அதனைத்தான் காண்கிறோம்.

தேர்தல் நெருங்க நெருங்க, இழிமொழிகள் உமிழ்வோர் கும்பல் கும்பலாகக் கிளம்புவர். ஆந்தை அலுத்துவிட்டது கோட்டான் தோற்றுவிட்டது என்று கூறத்தக்க விதமான 'ஒலி' கிளம்பிடும்; காது குடைச்சல் எடுத்திடும் விதமாக. கவலையோ, கோபமோ துளியும்ஏற்படவிடக்கூடாது.

தரமற்றவர்கள், கீழ் நிலையில் உள்ளவர்கள் எதையோ பேசட்டும், எப்படியோ ஏசட்டும் அண்ணா! மேல் நிலையில் உள்ளவர்கள், உயர்ந்த பதவியில் இருப்பவர்கள், தலைவர்கள் பீடத்தில் அமர்பவர்கள் இவர்களெல்லாமோ, இழித்தும் பழித்தும் பேசுவது, இட்டுக் கட்டிப் பேசுவது என்று கேட்கிறாய். கேள்வி, நியாயமானதுதான் தம்பி! ஆனால் சற்று அவசரப் பட்டுக் கேட்டுவிட்டாய்.

**உயர இருப்பதெல்லாம் உயர்ந்தது என்று யார் உனக்குச் சொன்னார்கள்.**

**தாழ இருப்பதெல்லாம் தாழ்ந்தது என்று ஏன் கருதிக்கொள்கிறாய்.**

**பூமியின் கீழே, மிக மிகக் கீழே கிடைத்திடுகிறது வைரம்! உயரத்தில் அல்ல!! எனினும் வைரம் உயர்ந்த பொருள்!! கட்டுவிரியன் குட்டி! மரத்தின் உச்சாணிக் கிளையிலே போய் இருந்து கொண்டால், மிக உயர்ந்ததாகிவிடுமோ? ஆகாதன்றோ!**

உயரம்—தாழ்ந்த இடம்—மலை—மடு—சரிவு,—பள்ளத்தாக்கு—சம நிலம்—இவை, இடங்களின் அமைப்பைக் குறிக்கின்றன; தரத்தை அல்ல. ஆகவே உயர்ந்த இடம்—மேலான பதவி—இங்கு உள்ள்வர்களெல்லாமோ, இழிமொழி பேசுவது என்று கேட்டுக் கவலைப்பட்டுக் கொள்ளாதே.

இடமும் இயல்பும் பொருந்தி இருந்துவிடுவது, இலட்சத்தில் ஒன்று இருக்கலாம்.

இடத்திற்குத் தக்க இயல்பு பெற்றிட முனைபவர், பதினாயிரத்தில் ஒருவராக இருக்கலாம்.

ஆனால் உயர இருப்பதனைத்தும் உயர்ந்தது என்று பொது இலக்கணமாக்கிடக் கூடாது.

உயர்ந்த இடத்திலுமா இப்படிப்பட்ட இயல்பினர் உள்ளனர் என்று கூறினால், பொருளுண்டு.

உயர்ந்த இடம் அடைந்தபிறகாவது, தமது இயல்பினைச் சிறந்ததாக்கிக் கொள்ளக்கூடாதா, உயர்ந்த இயல்பினைப் பயின்று கொள்ளக்கூடாதா என்று கேட்கத் தோன்றும். அது நல்ல கேள்வி. ஆனால் நடைமுறை வேறுவிதமாக இருக்கிறதே, என்னசெய்ய!

வேறோர் விந்தை இதிலே என்ன என்றால், தம்பி! உயர்ந்த இடம் சென்ற காரணத்தாலேயே, ஒரு 'துணிவு' பிறந்துவிடுகிறது எதையும் பேசலாம், எப்படியும் பேசலாம் என்று. நாமிருக்கும் இடமோ, மிக உயர்ந்த இடம், நம்மை யார் என்ன செய்ய முடியும், இந்த உயர்ந்த இடத்தில் இருந்துகொண்டு எவரை என்ன கூறினாலும் அவர்கள் இடத்தின் உயர்வுகண்டு, அச்சம்கொண்டு, அடங்கிடப்பர்!— என்று எண்ணிக்கொள்ளும் போக்கு தடித்து விடுகிறது.

பெரும்பாலான மக்கள், உயர் இடம் சென்றுள்ளவர்களைக் கண்டதும், அச்சம்கொள்வதும், அவர்

கனைப் போற்றிடத் துடிப்பதும், அவர்களின் பேச்சிலே புதுப்புது பொருளும் பொலிவும் அருமையும் பெருமையும் இருப்பதாக எண்ணி மயக்கம் கொள்வதுமான நிலையில் உள்ளனர்.

உயர்ந்த இடம் செல்வதற்கு முன்பு அவரிடம் காணமுடியாதிருந்த 'அறிவாற்றலை' உயர்ந்த இடம் சென்றதும், காண முற்படுகின்றனர்! இருப்பதாகவே கூறுகின்றனர்! நம்புகின்றனர்!

காமராஜர், தமிழ்நாடு காங்கிரசின் தலைவராக இருந்தபோது அவரைப்போற்றிப் புகழ்ந்திட, தமிழ் நாட்டிலேயே கற்றோரும், மற்றோரும், கனதனவான்களும், புலவர்பெருமக்களும், அதிகாரிகளும், வழக்கறிஞர்களும், நீதிபதிகளும், வணிகப் பிரமுகர்களும், கல்லூரிப் பேராசிரியர்களும், ஆய்வாளர்களும், துடிதுடித்துக் கொண்டா திரண்டு வந்தனர்.

ஒரு பரிதாபம் கலந்த பரிவுகாட்டினர்.

போற்றிப் புகழ்ந்திட முன்வந்தார் இல்லை,

ஆனல், அந்த நிலையா இன்று? கற்றோரும் மற்றோரும் இன்று என்னென்னமோ அறிவாற்றலைக் காண்கின்றனர், காமராஜரிடம்! போற்றிடத் துடிக்கின்றனர்! படிக்காதமேதை என்றும் பாமரரின் பிரதிநிதி என்றும், மக்களை அறிந்தவர் என்றும் மனப்பாங்கு உணர்ந்தவர் என்றும் பிரச்சினைகளை விளக்குபவர் என்றும் சில்கல்களைத் தீர்ப்பவர் என்றும், எழுச்சி ஊட்டுபவர் என்றும் செயலில் தீரர் என்றும், பாராட்டுகின்றனர்.

தமிழ்நாடு காங்கிரஸ் தலைவராக அவர் இருந்தபோது அவர்மீது பொழியப்படாத இந்தப் புகழ்மாரி, அவர் முதலமைச்சராகி அகில இந்தியத் தலைவராகி, அமைச்சர்களை உண்டாக்கித் தரும் 'சிற்பி' என்ற நிலைபெற்றவரானதும், வேகமாகப் பொழியப்படுகிறது காண்கிறோம்.

போற்றுவாரற்று அவர் இருந்த நாட்களுக்கும், போற்றுதார் இல்லை என்று கூறத்தக்க இந்த நாட்களுக்கும் இடையில், அவர் தமது அறிவாற்றலை மிகப் பெரும் அளவு வளர்த்துக் கொள்ள நேரமோ, வாய்ப்போ, முறையோ இருந்தாக அவருடைய துதிபாடகர்கள் கூடக் கூறமாட்டார்கள்!

ஆனல் அவர் உயர் இடம் சென்ருர், போற்றிடுவோரின் குரல் உயர்ந்தது!

இடத்தின் உயர்வுகண்டு அதிலே உள்ளவர்களைப் போற்றிப் புகழ்ந்திட முற்படும்போக்கு, இன்று நேற்றல்ல, நெடுங்காலத்துப் பழக்கம்.

புகழுரை கேட்டுக்கேட்டு, உயர் இடம் சென்றடைந்தவர்கள் முதலில் மகிழ்கின்றனர், பிறகு மயங்குகின்றனர், பிறகு மமதை அடைகின்றனர், இறுதியில், புகழுரையில் தெரிவிக்கப்பட்டிருக்கும் அருங்குணங்கள் அனைத்தும் தமக்கு உண்மையிலேயே இருப்பதாக நம்பிக்கை கொண்டு விடுகின்றனர். அந்த நம்பிக்கை தடித்துவிட்டால், எவரேனும் தன்னிடம் ஒரு சிறு குறை இருப்பதனை மிகப் பணிவுடன் சுட்டிக் காட்டிடினும் பொறுத்துக்கொள்ள முடிவதில்லை; பொங்கி எழுவர்! யார் அவன்! அவனுக்கு என்ன தெரியும்! என்ன தகுதி அவனுக்கு இருக்கிறது! —என்று முழக்கமெழுப்புவர்.

அந்த நிலைக்குச் சென்று விட்டவர்கள், பிறகு எதையும் யோசித்துப் பார்க்கவேண்டும் என்றுகூட ஒப்புக்கொள்வதில்லை. எல்லாம் எளிதாக அவர்களுக்குத் தென்படும். எதையும் முடித்துவிட முடியும் என்ற துணிவு பிறந்திடும். அது இறுதியில் அவர்களை எங்கு துரத்திடும் என்பதனை வரலாற்று ஏடுகளில் பல நிகழ்ச்சிகள் விளங்குகின்றன.

அழாதே! ஏதோ ஆத்திரத்திலே அடித்து விட்டேன். பொறுத்துக்கொள்; புத்திகெட்டு அடித்துவிட்டேன்.

அடிக்காமல் விட்டுவிட முடியுமா! நீ செய்த வேலைக்கு இந்த அடி போதாது, நானாக இருக்கவே இந்த அளவோடு விட்டுவிட்டேன். வேறு ஒருவனாக இருப்பின் முதுகுத்தோலை உரித்து உப்பு தடவி வெயிலிலே உருட்டிவிடுவார்கள் உன்னை. பயல், தப்பித்துக்கொண்டாய், போ! போ!

காரணம் தெரிவிக்கவேண்டுமோ, பயலுக்கு! அடித்தேன்! ஏன் என்று கேட்கிறாய். ஏன் என்று கேட்டதற்கே மற்றோர்தடவை உன்னைக் கட்டிவைத்து அடிக்கவேண்டும்......

தம்பி! செல்வச் செருக்கின் வளர்ச்சியிலே, ஒவ்வொரு கட்டத்தில் இவ்விதம் ஒவ்வொரு விதமாகச் 'சீமான்' பேசுகிறார் அல்லவா! உயர்ந்த பதவி பெறப் பெற, சிலருக்கு இந்தச் 'சீமான்' போக்கு தடித்துப்போய் விடுகிறது.

அந்தப் போக்குக்கு முதற் காரணமாக அமைவது, உயர்ந்த இடம் சென்றுவிட்டவர்களை, பொருத்தமும் பொருளும்கூடப் பாராமல், போற்றிப் புகழ்ந்திட ஒரு கூட்டம் கூடிவிடுகிறதே அதுவேதான்!!

உயர்ந்த இடம் சென்று விட்டவர்கள், இனியாகிலும் உயர்ந்த குணம் பெற்றுக்கொள்வோம் என்று முயற்சி எடுத்துக்கொள்ளக்கூடும்; அந்த முயற்சியே தேவையில்லை என்று இந்தத் துதிபாடகர்கள் முட்டுக்கட்டை போட்டுவிடுகின்றனர்.

தன்னை, பல்வேறு துறைகளிலே உள்ளவர்கள்,

எல்லாம் இவர் அறிவார்!

என்று போற்றிப் புகழ்ந்திடக் கேட்டால்,

எதையும் இனி நாம் தெரிந்துக்கொள்ளத் தேவை இல்லை.

என்ற எண்ணம் எப்படி வளராமல் போய்விடும்! அந்த எண்ணம் வரத்தான் செய்யும்.

அடுத்தக் கட்டமாக அமைவது மேலும் வேடிக்கையானது.

புகழ்பவர்கள்

புரிந்தவர்கள்;

புகழாதவர்கள்

புத்திகெட்டவர்கள்

என்ற புது இலக்கணத்தையே உயர் இடம் சென்று 'துதி பாடகர்'களைப் பெற்றுக் கொண்டவர் ஆக்கிக் கொள்கிறார்.

மருத்துவர்கள் கூறிடும் முறைகளை அவர் மறுப்பார்; மருத்துவர்கள் வாய் பொத்திக் கொள்வர்; அவர் அறியாரா? அறிந்துதான் கூறுகிறார்! ஏடுகளிலே உள்ளவற்றை நாம் கூறுகிறோம்; அவரோ, அவருடைய அறிவினால் ஆராய்ந்து பார்த்துக் கூறுகிறார்; அவருடைய சொல்லை மறுத்துப் பேசிட நாம் யார்! அவருடைய நிலை என்ன, ஆற்றலென்ன! அறிவென்ன! அவருக்குள்ள தகுதி என்ன! திறமை என்ன! அவருக்கு முன் நாம் எம்மாத்திரம்! அவர் நட்சத்திரம், நாம் மின்முனி!—என்று கூறுவர்; ஒப்புக்கு அல்ல; உண்மையாகவே அவ்விதம் நம்பிக் கொண்டே பேசுகின்றனர்.

> அவ்விதம் பேசுபவர் ஆதாயமும் அடைகின்றனர், ஆதாயம் சுவை அளிக்கிறது. அந்தச் சுவை அவர்களை மேலும் புகழ் பாடச் செய்கிறது. அஃது ஒரு கலையாகவே வடிவம் கொள்கிறது.

ஆதாயம் பெறவே பலரும் தன்னைப் புகழ்கிறார்கள் என்பது முதலிலே புரிகிறது, பிறகு அதுகூட மறந்து போய்விடுகிறது, போற்றுதலைப் பெற்றுப் பழக்கப்பட்டுப் போய்விட்டவருக்கு.

> இவ்வளவு பேர் புகழ்கிறார்கள்; போற்றுகிறார்கள்; பின்பற்றுகிறார்கள்; பணிந்து கிடைக்கிறார்கள்; ஆனால்! இந்தச் சிறு கூட்டம் மட்டும் நம்மிடம் குறை காண்கிறதே, எதிர்க்கிறதே! என்ன துணிவு! என்ன ஆணவம்! இதுகளை விட்டு வைக்கலாமா; கூடாது! கூடாது! ஒழித்துக்கட்டியாக வேண்டும்!—

என்ற எண்ணம் முளைத்துவிடுகிறது; அதன்படி திட்டமிட முனைகிறார்.

இதற்கான திட்டத்திலே முதற்கட்டம் தன்னிடம் பணியாது இருப்பவர்களிலிருந்து ஒரு சிலரையாவது அச்சமூட்டியோ ஆசை காட்டியோ தன் பக்கம் இழுத்துக் கொள்வது.

> மரத்தை வெட்டப் பயன்படும் கோடாலிக்குக் காம்பு வேண்டுமல்லவா! அந்தக் காம்பினை, மரத்திலிருந்துதானே தயாரிக்கிறார்கள்; அது போலத்தான்.

திட்டத்தின் இந்தக் கட்டத்தின்போது, புதுத் துதிபாடகர்கள் தயாரிக்கப்படுகின்றனர்.

தம்பி! துதிப்பாடகர்களைத் தயாரித்துக் கொள்ளும் கட்டம் இருக்கிறதே, அப்போது உயர் இடம், மெத்தப் பயன் அளிக்கிறது. சுவையுள்ள பண்டங்களைத் தர முடிகிறதல்லவா, துதி பாடகர்களுக்கு!!

> ஐயோ! அந்த ஆசாமிடா! அந்த ஆளிடம் பேசினாலே ஆபத்து! போலீஸ் சந்தேகப்படும். நமக்கு ஏன் வீண் வம்பு.

என்று இதே காமராஜர் குறித்துப் பேசிய சீமான்கள்தானே, சுயராஜ்யம் அமைத்த பிறகு, காமராஜர் பெரும் பதவி வகித்திடத் தொடங்கிய பிறகு—

> ஐயாவா! வரணும், வரணும்! தங்கள் சித்தம் என் பாக்கியம். என்னால் என்ன காரியம் ஆகவேண்டும் சொல்லுங்கள்; செய்ச் சித்தமாகக் காத்துக்கொண்டிருக்கிறேன்.

என்று பேசத் தொடங்கினர். காரணம்? காமராஜர், ஒரு மாபெருந் தலைவருக்குத் தேவைப்படும் அறிவாற்றல் பெற்றவர் என்பதனை இப்போதுதான் உணர்ந்து கொண்டனரா, உல்லாசபுரியினர்...? இல்லை! இப்போதுதான், உல்லாசபுரியினருக்கு உதவி செய்திடும் இடத்திற்குக் காமராஜர் வந்திருக்கிறார், என்ற காரணத்தால்,

துவக்கத்தில் துதிபாடகர்களைத் தடுத்திடவும், இத்தனை ஆராதனையும் அர்ச்சனையும் தமக்குத் தேவை இல்லை என்ற உணர்வும், மிக அதிகமாகத் தம்மைப் பாராட்டுகிறார்கள் அது கூடாது, அதனை ஏற்றுக்கொள்ளக் கூடாது என்ற அடக்க உணர்ச்சியும் தோன்றுகிறது.

> துதிபாடகர்கள் பற்றி சந்தேகமேகூட எழுகிறது.

> துதிகேட்டு, மனதைக் கெடுத்துக் கொள்ளக்கூடாது என்று தோன்றுகிறது. தடுக்க முயலுவர்,

வேண்டாமப்பா இந்த வீண் புகழ்மாலை என்றும், நான் ஏமாளி அல்ல உன் பாராட்டுதலை உண்மை என்று ஏற்றுக்கொள்ள என்றும் சொல்லும்போது கூட, பாராட்டுதலைப் பெற்றதிலே கிடைத்த தனி மகிழ்ச்சி இருக்கிறதே அது குறைவதில்லை. சொல்லப் போனால், மகிழ்ச்சி வளருகிறது.

கொடுப்பவன் எதையும் இழப்பதில்லை என்ற பேச்சு வேதாந்தத்தில் என்ன பொருள் தருகிறதோ தெரியாது. ஆனால் ஒருவரை மற்றொருவர் பாராட்டுவது இருக்கிறதே அதைப் பொறுத்தவரையில், கொடுப்பவன் எதையும் இழப்பதில்லை என்பது பெருமளவு உண்மை.

அவர் குணத்திலே தங்கம், அறிவுத் தெளிவிலே வள்ளுவன், பற்றற்ற தன்மையிலே புத்தன், என்று பாராட்டுவதாலே பாராட்டுபவனுக்கு என்ன நட்டம்! சொல்லப் போனால் ஒரு விதமான ஆதாயம் கிடைக்கிறது என்றும் கூறலாம். எவர் இவருடைய பாராட்டுதலைப் பெற்றாரோ அவர் 'நாலு பேரிடம் இவர், வள்ளுவனையும் புத்தனையும் நன்றாகக் கற்றறிந்தவர், எதையும் எடைபோட்டுப் பார்த்துதான் பேசுவார், என்று சொல்லிவைப்பார் அல்லவா!

ஆகவே கொடுப்பவர் எதையும் இழப்பதில்லை என்பது மட்டுமல்ல, கொடுப்பவர் ஏதாகிலும் பெறுவார் என்றே கூடக் கூறலாம். அது சிற்றுண்டியாக இருக்கலாம், சிறு கடன் தொகையாக இருக்கலாம் அரிய பொருளாக இருக்கலாம், வசதியான வேலையாக இருக்கலாம். பெறுவது எத்தனையோ வடிவத்தில் வகையில் இருந்திடக் கூடும்; இடத்திற்கும் நேரத்திற்கும் தக்கபடி.

கொடுப்பவர் இழப்பதில்லை என்பதை ஒப்புக் கொள்வோம்; ஆனால் பெறுபவர்? அதிலேதான் வேடிக்கை இருப்பதாக எனக்குப்படுகிறது; பலரும் இந்தக் கருத்துக் கொண்டுள்ளனர்.

புகழ் மொழியைப் பிறர் கூறக்கேட்டு மகிழ்ச்சி கொண்டிடும் பழக்கம் வளர வளர, ஏதேனும் சில வற்றில், எவரேனும் சில பேர்கள், எப்போதோ சில

வேளைகளில், புகழ்மொழி வழங்காது போயிடின், புகழ்மொழி கேட்டுக் கேட்டுப் பழக்கப்பட்டுள்ளவர், என்றுமில்லாத மனப்புழுக்கம் கொண்டுவிடுகிறார். ஏதேதோ ஐயப்பாடுகள்! அச்சம்! அருவருப்பு! பகை உணர்ச்சியேகூட!

சே! இந்த மாந்தரின் இயல்புதான் என்ன! எத்தனை 'வர்ணஜாலம்' காட்டி என் தோகையை விரித்து ஆடுகிறேன்! கண்டு சொக்கி நிற்பார்கள் என்று!! பார்த்துவிட்டு உருகணம் புன்சிரிப்பு உதிர்த்துவிட்டு அவனவன் அவனவனுக்கு உள்ள வேலையைக் கவனிக்கச் சென்று விடுகிறானே! என் நடனம் நயனங்களுக்கு விருந்து என்று கவிகள் பாடியுள்ளனர். ஓவியம் தீட்டியுள்ளனர், எனினும் பாரேன் கலைரசம் அற்றவனை; என்னைக் கண்டான் ஒருகணம், பிறகோ காளையை ஓட்டிக்கொண்டு கழனி சென்றுவிட்டான், சேற்றிலே சந்தனம் காண! —என்று மயில் கருதிக் கொள்கிறதோ என்னவோ, 'முகஸ்துதி' கேட்டுக்கேட்டு மகிழ்ச்சி மது உண்டு விட்டவன், ஒருவேளை அது கிடைக்காவிட்டாலும் சலிப்பும் மனக்களைப்பும் கொண்டுவிடுகிறான்; அதனால். தனக்குத் தேவைப்பட்டே தீரும் மகிழ்ச்சியை, இன்பத்தை எப்போதும் பெற்றிடவேண்டும் என்பதற்காக, புகழ் பேசுபவர்களைத் தயாராக வைத்துக் கொண்டிருக்கவேண்டி நேரிடுகிறது; எப்போதும் புகழ்பாடியபடி அவர்கள் இருக்க வேண்டுமானால், அவர்களை 'கவனித்துக்கொள்ள' வேண்டி வருகிறது! அந்தக் கட்டம் மேலும் வளராமலிருப்பதில்லை. புகழ் பாடுபவர்களைக் கவனித்துக்கொள்ளவும் தயாராக வைத்துக் கொண்டிருக்கவுமான கட்டத்திலிருந்து, புகழ் பாடிகளைக் தயாரிக்கவே வேண்டிவருகிறது. ஓட்டலில் போடப்படும் கிரமப்போன் இசையைக் கேட்டுக் கேட்டு பழகிவிடுபவன், தன் இல்லத்திலேயே அந்த இசையைப் பெற வழி தேடிக்கொள்ள முயற்சிப்பது போல, புகழ் பேசுவோர் பேசிவது கேட்டு மகிழ்ச்சி பெற்று, அதிலே மயங்குபவன் பிறகு புகழ் பேசுவோரையே தயாரிக்கவேண்டிய கட்டம் சென்றுவிடுகிறான் அதிலே இயல்பாக உள்ள உயர்வு இல்லை என்றாலும், எப்போதும் கிடைக்கிறது. தட்டாமல் தயங்காமல் கிடைக்கிறது, தெகிட்டும் அளவு கிடைக்கிறது என்பதிலே ஒரு திருப்தி கிடைத்திடத்தான் செய்யும். ஆனால் அதற்காக ஆகிடும் செலவு! அதற்காக எடுத்துக் கொள்ளப்படவேண்டிய சிரமம்! அதனைக் கணக்குப் பார்க்கும்போது, பெறுபவன் இழக்கிறான் என்று கூறிவிடலாம்; கணக்கு அதைத் தெளிவாகக் காட்டுகிறது.

கணக்கு அந்த அளவோடு நிற்பதில்லை. மது குடித்துப் பழக்கப்பட்டுப் போய்விட்டவனுக்கு வேறு எதிலேயும் அந்த இனிப்பும், விறுவிறுப்பும் கிடைப்பதில்லை என்பதால். வேறு எந்தவிதமான பானத்தையும் விரும்பமாட்டான் என்கிறார்கள். அந்த 'விறுவிறுப்பு' கிடைக்காதபோது எல்லாவற்றையுமே இழந்து விட்டது போன்ற ஓர் ஏக்கநிலை பிறந்துவிடுகிறது. இந்தத் துறையிலே எல்லாம் தெரிந்தவர்கள் கூறுகிறார்கள். மது பருகிப் பருகிப் பழக்கத்தை அழுத்தமாக்கிக் கொண்டவர்களுக்கு, சிலகாலம் கழிந்த பிறகு வழக்கமாகப் பருகிடுவது போதுமானதாகப் படுவதில்லையாம்; அதைவிட அதிக 'விறுவிறுப்பு' உள்ளது வேண்டும் என்று தவியாய்த் தவிக்கிறார்களாம். உண்மையோ அல்லவோ தெரியவில்லை, எல்லா விதமான மது வகையையும் பருகியான பிறகு 'தவிப்பு' மேலிட்ட நிலை சென்றவர்கள், ஏதோ ஓர் வகையான பாம்பின் விஷத்திலிருந்து தயாரிக்கப்பட்டதை நாவில் தெளித்துக்கொண்டு போதுமான போதை பெறுகிறார்களாம். இது மிகைப்படக் கூறப்பட்டதாக இருக்கலாம்; என்றாலும் 'தவ்ப்பு' அத்தனைக் கொடுமையான நிலைமைக்கும் துரத்திவிடும் என்பதை விளக்கத் தரப்பட்டதாகக் கொள்வதிலே தவறு இல்லை.

ஆகவே பெறுபவன் இழக்கிறான் என்பது, பொருளையும் நேரத்தையும் மட்டுமல்ல, மன அமைதியையும் இழந்து விடுகிறான் என்ற பொருளும் தருகிறது.

ஆனால் ஏன் இந்த 'முகஸ்துதி' கேட்பதிலே இன்பம் பிறக்கிறது? இன்று நேற்று ஏற்பட்டதல்ல! தரத்தில் குறைந்தவர்களுக்கு மட்டும் ஏற்படும் இயல்பும் அல்ல. மாந்தருக்கு மட்டுமல்ல, மகேசனுக்கே அந்த இயல்பு இருக்கும் என்று எண்ணிடச் செய்கிறார்கள் 'பக்திப் பாமாலை' புனைந்தளித்தோர்! ஆயிரம் நாமத்தால் அர்ச்சிப்பது, இதிலே சாதாரணமானதாகி விட்டது; கட்டணம்கூட அதிகமில்லை. ஆனால் மகேசனின் 'திருக்கோலத்தையும், திருக்கலியாண குணத்தையும், திருவிளையாடலையும்' புகழ்ந்து தொடுக்கப்பட்டுள்ள பாமாலைகளைப் பார்த்திடும்போது, போட்டி போட்டுக்கொண்டு புகழ் பாடி 'புனிதனின்' புன்னகையைப் பெற்றிட முனைந்திருக்கிறார்கள் என்பது புரிகிறது.

ஆண்டவனுக்கு விருப்பு வெறுப்பற்றவன், நீதி நியாயத்தை வகுத்தவன் என்றெல்லாம் 'இலக்கணம்' இருப்பதனால், இத்தனைப் புகழ் கேட்டும், அவர் மயங்கிடாதிருப்பார் என்று முடிவு செய்துகொள்ளலாமே தவிர, அந்தப் பாமாலைகளை மட்டும், 'எல்லாம் அளிக்க வல்லவருக்கு' 'எதையாவது பெற விழைபவர்' அளித்திடும் புகழாரம் என்ற அளவிலே பார்ப்போமானால், அந்தக் கலையை எத்தனை நேர்த்தியாக வளர்த்து விட்டிருக்கிறார்கள் என்பது நன்றாக விளங்கும்.

பெறுபவர் இழக்கிறார் என்ற கருத்து 'பெம்மானை'ப் பொருத்தவரையில் பொருந்தாது. ஏன் என்றால் 'உள்ளது அனைத்தும் அவன் தந்தது' எனப்படுவதால். ஆனால் இன்று உலகு உள்ள நிலையைப் பார்க்கும்போது, பாமாலை பெற்ற அவரும் நிரம்ப இழந்துவிட்டிருக்கிறார் என்றே கூறத் தோன்றுகிறது. எத்தனை எத்தனை நலிவுகள்! நாசங்கள்! பேதங்கள்! பீடைகள்! வஞ்சம்! அவன் படைப்புகளில் சில, பலவற்றை அழித்திடும் கொடுமை! இவையாவும் அவர் வகுத்த முறையுமாகாது, அவர் விரும்பும் முறையாகவும் இருக்க முடியாது. எனினும் உலகம் எந்த நிலைமைக்கு உருக்குலைக்கப்பட்டிருக்கிறது. இதனைக் கண்டும் 'அவர்' ஏன் குவலயத்தை இன்னமும் விட்டுவைத்திருக்கிறார் என்று எண்ணும்போது ஒருவேளை அவரும் புகழ் பாடக் கேட்டுக் கேட்டுப் பழகிப் போனதால். 'பெற்றவர் இழப்பர்' என்ற கருத்துக்கேற்ப ஆகிவிட்டாரோ என்று எண்ணிடத் தோன்றுகிறது.

மகேசன் 'எல்லாம் வல்லவர்' என்பதால் அவருக்கு இதுபற்றிய வரவு-செலவு பற்றிய நினைப்பு எழத் தேவையில்லை. ஆனால் மாந்தரோ, ஒவ்வொரு கட்டத்திலும் இந்த வரவு-செலவுக் கணக்கைப் பார்த்தாக வேண்டும்.

தமிழ் மரபு புகழ் பெறுவது, முகஸ்துதி அல்ல என்பதனை நினைவிற் கொண்டிட வேண்டும்.

புகழ் பெற்றிடவேண்டும் என்ற நினைப்புக் கொள்வது மட்டுமல்ல, ஒருநாள் இல்லாவிட்டால் மற்றோர் நாள் புகழ் தன்னைத் தேடிவந்திடும் என்பதிலே தளராத நம்பிக்கையுடன் பணியாற்றிட வேண்டும்.

செயல், முதல்! உழைப்பு, முறை! புகழ், விளைவு;

சில மலர் விரைவினில் பூத்திடும், உதிர்ந்திடும். சில மலர் பூத்திடுவதும் உதிர்ந்திடுவதும் விரைவிலே இருந்திடாது.

எனவே புகழ் தேடிச் செல்லத் தேவையில்லை. செயலின் நேர்த்தி புகழைப் பிடித்திழுத்துக் கொண்டு வந்து நம்முன் நிறுத்தும் என்ற உணர்வுடன் தமிழர் பணியாற்றினர்; புகழ் ஈட்டினர்.

இந்தப் புகழ் நமக்கு நமது நாட்களிலே கிடைத்திடாது போகக்கூடும்; எனினும் பிறகோர் நாள் பலர் புகழ்ந்துரைக்கத் தக்க நிலை பிறந்தே தீரும் என்று உறுதி கொண்டு பணி புரிந்தவர்களே நிலையான புகழைப் பெற்றனர்; இறவாப் புகழ் பெற்றனர்.

மன்னன் ஆணையையும் உதவியையும் பெற்று கடற் பயணம் நடத்தி, எவரும் காணாதிருந்த அமெரிக்காவைக் கண்டுபிடித்த கொலம்பஸ் பிறகோர் நாள் அதே அரச அவையிலே இழிமொழியைக் கேட்டு இன்னலால் தாக்குண்டபோது, மெல்லிய குரலில் கூறினானாம்.

"இந்த மன்னனையும் இவன் அரசையும் மறந்துபோன பிறகும் நெடுங்காலம் வரையில் மக்கள் என்னையும் என் வெற்றியையும் மறவாது பாராட்டுவர்" என்றானாம்.

கட்சிக்கோ, அதன் மூலம் நாட்டுக்கோ தலைவரானவர்கள், இதுபோன்ற இறவாப் புகழ் தேடிட முற்படவேண்டும்—இரைச்சலிடுவோரின் புகழுரையை அல்ல! இச்சகம் பேசுவோரின் புகழ்ச்சியை அல்ல!

அந்த நோக்கம் கொண்டிடின் தம்மைச் சுற்றிலும் உள்ளவர்கள், பிறரைத் தூற்றிடுவோராக இருந்திடின் அவர் தம் தொடர்பு அறுத்துக் கொண்டிடும் உறுதி காட்டிடவேண்டும்; துதி பாடகராக இருந்திடின், போதும் இந்த 'முகஸ்துதி'—நான் இதுகேட்டு மயங்கிடமாட்டேன் என்று திட்டவட்டமாகத் தெரிவித்துவிடவேண்டும்

அது போன்றே, தம்பி! ஜனநாயக முறை செம்மை அடையவேண்டுமென்றால், துதி பாடும் முறை அறவே போயாகவேண்டும்.

அன்பு காட்டுதல் வேறு துதிபாடுதல் முற்றிலும் வேறு!

பின் பற்றுதல் வேறு, தொத்திக் கொள்ளுதல் என்பது வேறு. பாராட்டுதல் என்பது வேறு பல்லிளித்தல் என்பது முற்றிலும் வேறு; நோக்கம், விளைவு, தரம் எனும் எந்த முனையிலிருந்து பார்த்திடினும்.

ஒருவர் உயர் இடம் சென்றிடினும், அவர் கூறுவனவற்றினில் உள்ள உயர்வான கருத்துக்களைத் தான் எடுத்துக்கொள்ள வேண்டும், போற்றிட வேண்டும்; பின்பற்றிடவேண்டும்; எல்லாவற்றையும் அல்ல.

சேற்றிலே இருந்திடினும் செந்தாமரை, செந்தாமரைதான்!

ஆனால் செந்தாமரை இருந்ததாலேயே, அந்தச் சேறுமா சந்தனமாகிவிடும்?

பேதையும் அதுபோலக் கூறிடானே!

தலைவராகி, நாட்டை நடத்திச் செல்பவராகி விட்டார் காமராஜர் என்கிறார்கள். மெத்த மகிழ்ச்சி. ஆனால், அதனால் அவரிடம் இருந்து நாம் எதைபெற நினைத்திடவேண்டும்? மக்களுக்குத் தேவையான நல்லாட்சியை! அவருக்கு நாம் என்ன தரவேண்டும்? முகஸ்துதியையா? அவர் எட்டுடன் எட்டு பதினெட்டு என்று கூறிடின், ஆகா! இஃதன்றோ புதுமுறைக் கணக்கு! இதுநாள்வரை எவரும் கூறிடாத கணக்கு!!—என்று வியந்து பாராட்டிடுவதுடன், மற்றவர்களும் மதிமயக்கம் கொண்டிடவேண்டும் என்று கூறி நிற்பதா?

துதிபாடகர்கள், புகழ்பாடிப்பாடி மகிழ்கிறார்கள்; அவரை மகிழ்விக்கிறார்கள், பிறகோர் நாள்; ஏமாற்றம் தாக்கிடும்போது என்ன கூறுவர்? என்னென்ன புகழ்மாரி பொழிந்தேன்! எப்படி எப்படித் தூக்கி வைத்தேன்! என்னாலன்றோ எட்டாததெல்லாம் அவர் கரம் எட்டிற்று! பட்டுப்போக இருந்தமரம் துளிர்விட்டது! படர்ந்துபோக இருந்த விளக்கு ஒளி பெற்றது! என்னென்ன புகழுரைகள்—பொழிந்தேன்! அர்ச்சனை விதவிதமாக! ஆராதனை பலப்பல! இதற்கு முன்பு வேறு ஒருவரும் செய்திடாத முறையில்! கண்டோர் வியந்திடும் வகையில்!! ஆனால்......என்றல்லவா பேசிடுவர்.

பாடல் தெரியுமல்லவா தம்பி!

"கல்லாத ஒருவனை நான் கற்றாய் என்றேன்."

துதிபாடகர்கள், தமது குரலொலியை அதிகமாக்கிக் கொள்வதன் மூலமாகவே, தமது இயல்பு யாது என்பதையும், நோக்கம் என்ன என்பதையும் மக்கள் தெரிந்துகொள்ளச் செய்துவிடுவதன்மூலம், நாளாவட்டத்தில் தமது தரம் தன்னாலே தாழ்ந்து போவது காண்பர். அரசு பெரிது எனினும் கட்டியங்கூறுவோனின் நிலை, மட்டமானதுதானே!

எந்தக் கொலுமண்டபத்திலும் கைகட்டி வாய் பொத்தி நின்றுமட்டுமே பிழைக்கும் வழியைப் பெறமுடியும் என்ற நிலையில் இல்லாத அறிவாளர்கள்—பல்வேறு துறைகளிலே வித்தகர்களாக உள்ளவர்கள்—துதிபெற்று நிலை உயர்ந்து ஒருவர் நெறித்த புருவத்தினராகிறார் என்ற உடன், நமக்கென்ன என்று இருந்துவிடாமல், நாலுபேர் செல்கிற வழியில் நாமும் செல்வோம் என்று தாழ்ந்துவிடாமல், உண்மையை எடுத்துரைத்திட முன் வந்திடவேண்டும். பெரிய நிலையில் உள்ளவர்கள், தவறான கருத்து கொண்டிடின், தவறான போக்கினை மேற்கொண்டிடின், அறிவு கொளுத்திட, இடித்துரைத்திட, தடுத்து நிறுத்திடத் தயங்கிடலாகாது. தயக்கம் காட்டிடின், மக்களாட்சி முறையின் மாண்பே மாய்ந்து போகும்.

நிலை உயர்ந்திடின் என்ன? நீதி எதனையும்விட உயர்ந்தது! உண்மையே அனைத்தினும் உயர்ந்தது! அந்த உறுதியுடன் ஒரு சிலர் நடந்துகொண்டிடினும்

போதும், மெள்ள மெள்ள ஆனுல் உறுதியாக, மக்களாட்சியின் மாண்பு வளர்ந்திடும்.

அமெரிக்கக் குடி அரசுத் தலைவர் ஜான்சன், அறிவாளர்களை, கலைஞர்களை, விஞ்ஞானிகளை, போற்றுபவர்; ஆதரவு காட்டுபவர்; எனினும் வியட்நாம் பிரச்சினையில் மேற்கொண்டிடும் போக்கு தவருனது, ஆபத்தைத் தரத்தக்கது. அநீதி நிரம்பியது என்பதனை எடுத்துரைக்க, கண்டித்திட பேரறிவாளர் துளியும் தயங்கிஞர்களில்லை.

அஃது அவர்களின் நெஞ்சுரத்தையும் நேர்மைத் திறத்தையும் காட்டுகின்றது.

அஃது முதலில் ஜான்சனுக்குக் கோபத்தைக் கூடக் கிளறிவிட்டிருக்கக்கூடும்! முதலில். பிறகு அவரேகூட அவர்களின் நேர்மையை வியந்து பாராட்டிடத்தான் செய்வார்.

அரசாளும் முறை, சட்டமியற்றும் முறை; பொருளாதார முறைகள் என்ற பலவற்றிலே, குறை உள! அறிந்தோர், அதனை மற்றையோர்க்கு அறிவித்திட அஞ்சலாமோ? அரசாளும் நிலைபெற்ரேர்க்கு எச்சரிக்கை தந்திடாது இருந்திடுவோமா?

துதிபாடகரின் புகழ் கேட்டுக் கேட்டு மயக்கம் மேலிட்ட நிலையில் உள்ளவர்கள், எவரேனும் தமது முறையில் குறைகண்டு கூறிடின் கொதித்தெழுவர். ஆம்! ஆனுல்? கூருது இருந்திடின்? மக்களுக்கு அல்லவா பெருந்தீங்கு செய்தவராவர்.

இந்தத் தயக்கத்திலிருந்து தம்மை விடுவித்துக்கொண்டு, ஆட்சிமுறையிலே காணப்படும் கேடுகளைக் கண்டித்திட, நல்லறிவு தந்திட, பலர் இன்று முன்வருகின்றனர். மகிழ்ச்சி!

ஐந்தாண்டுத் திட்டம்—நாணய மதிப்புக் குறைப்பு—போன்றவைகளிலே நெளியும் குறைபாடுகளை, அமெரிக்காவின் பிடி வலுவாக்கிக்கொண்டு வருவது, உணவுப் பிரச்சினையிலே நெருக்கடி நீடிப்பது போன்ற பிரச்சினையிலே, பல்கலைக் கழகப் பேராசிரியர் பலர் தெளிவான கருத்தையும், துணிவான கண்டனங்களையும் வெளியிட்டுள்ளனர்.

காங்கிரஸ் கட்சியினராக இருந்தும் முன்ஞள் அமைச்சர், க. சந்தானம் அவர்கள் இந்தத் துறையிலே பாராட்டத்தக்க பணியாற்றி வருகின்ருர்கள்.

துதிபாடகர்கள் கிளப்பிடும் ஒலியில், இவர்களின் குரல் வெளியே தெரியவிடாமல் செய்யப்பட்டு விடுகின்றது; என்ருலும் இவை மூலம் மக்கள் தெளிவு பெற்றுக்கொண்டு வருகின்றனர்.

நிலை கண்டு நடுங்கி உண்மையைக் கூறிடத் தயங்குவது, பெரும்பாலோருக்கு இயல்பு. சிலரேனும் அந்த இயல்பினை நீக்கிக்கொண்டுள்ளனர் என்பது மகிழ்ச்சிக்குரியது.

இன்னும் சிலர், உண்மையைக் கூறியாக வேண்டும் என்ற துடிப்பும் கொள்கின்றனர், கூறிடின் கேடடைவோமோ என்ற அச்சமும் கொள்கின்றனர்; அதன் காரணமாக, உள்ள குறைகளை, 'இலை மறை காய்' என்ற முறையிலே எடுத்துக் காட்டியுள்ளனர்.

தம்பி! பிரிட்டனை ஆண்டுவந்த இரண்டாவது சார்லஸ் என்ற மன்னன், தன்னைப் பெரிய கவிஞன் என்று எண்ணிக்கொண்டான்! ஏதேதோ கிறுக்கித் தள்ளியபடி இருந்தான்—கவிதைகள் என்ற நினைப்பில். கருத்தில்லை, கற்பனைத் திறம் இல்லை, இலக்கணம் இல்லை, எழில் இல்லை—ஆயினும் குப்பை, வார்த்தைக் கோவை என்று கூறிடலாமா? மன்னன் எழுதியது!!

மன்னன் அத்துடன் இல்லை. அரச அவையின் மதிப்புமிக்க கவிஞனை அழைத்து எமது கவிதையினைப் பற்றிய உமது கருத்தைக் கூறிடுவீர் என்ருன். என்ருனு? கட்டளை பிறப்பித்தான்!

கவிஞன் பார்க்கின்ருன், கடுங்கோபம் கொள்கின்ருன், வெறும் குப்பையைக் கவி என்று கூறியது பற்றி. என் செய்வான்? கவி உள்ளம் சொல்கிறது, இஃது கவிதை அல்ல என்று சொல்லிவிடு என்று. மன்னன் எழுதியதாயிற்றே என்ற நினைவு குதித்தெழுந்து கூறுகிறது, நாடாளும் மன்னன் எழுதியது! ஏடு தூக்கிடுவோனே! இஃது நற்கவிதையே என்று கூறிடு! இல்லையேல், மன்னன் சீற்றம் உன்னைத் தாக்கிடும் என்று. கூறுவாயோ அங்கனம்! கூறிடின் குவலயம் உன்னை என்ன சொல்லும். நற்கவிதை எது என்று அறியாத நீயோ கவிஞன்? உனக்கோ நீள் புகழ்? என்று கேலி பேசும். இப்போது மட்டுமா இழுக்கு! வழி வழி வருவோர் உன் கல்லறைமீது காரித் துப்புவர்; என்று அவனுடைய கவிதை உள்ளம் கூறுகிறது. என் செய்வான்! திகைத்தான், திணறிஞன், திடுக்கிட்டுப் போஞன்! நெடுநேரத்திற்குப் பிறகு ஒரு யோசனை பிறந்தது.

"அரசே!" என்ருன்; அரசே! தாங்கள் சகலவல்லமையும் பொருந்தியவர்! தங்களால் ஆகாததும் ஒன்று உண்டா! எதனையும் செய்து முடித்திடும் ஆற்றல் படைத்தவர் தாங்கள்! என்ன காரணத்தாலோ, மிகமிகமட்டமான முறையிலே கவிதை எழுதிக்காட்ட வேண்டும் என்று எண்ணிக்கொண்டீர்கள். தங்களின் பேராற்றலையும், கவிதா சக்தியையும் வேண்டுமென்றே எங்கோ ஒளிந்திருக்கச் செய்துவிட்டு குப்பை என்று சொல்லத் தக்க இந்தக் கவிதையை இயற்றினீர்கள்! நல்ல கவிதையை மட்டும் அல்ல இப்படிப் பட்டதையும் எழுத முடியும் என்பதை எடுத்துக் காட்டுவதில், மன்னு! தாங்கள் மகத்தான வெற்றிபெற்று விட்டீர்கள். வாழ்க தங்கள் ஆற்றல்! வாழ்க தங்கள் கொற்றம்! வாழ்க நற்கவிதை!—என்று கூறித் தப்பித்துக்கொண்டாராம் அந்தக் கவிஞன்.

இன்றைய ஆட்சியின் விளைவுகள் பற்றி எழுதிடும் பலர், இதுபோல, உண்மையை அப்பட்டமாகக் கூறிடின் ஆபத்து ஏற்படுமோ என்று அஞ்சி, பஞ்சத்தைப் பற்ருக்குறை என்றும், வேதனையைச் சோதனை என்றும், கடன் சுமையை உதவித்தொகை என்றும், பட்டாடை உடுத்திக் காட்டுகின்றனர்.

துதிபாடகர்களின் துந்துபி ஒருபுறம், அறிந்தோர் அச்சம் காரணமாகக் காட்டிடும் தயக்கம் மற்ருேர்புறம், எடுத்துரைப்போரும் இலைமறை காய் என்ற முறையில் உண்மையைக் காட்டிடும் தன்மை பிறிதோர் புறம், என்றுள்ள இந்தச் சூழ்நிலையை நமது சுறுசுறுப்பான பிரச்சாரம் மட்டுமே மாற்றிட முடியும்; மக்கள் தெளிவு பெற்றிடச் செய்யமுடியும்.

அதற்குத் தம்பி! நமது பேச்சிலும் எழுத்திலும் சூடு அல்ல ஒளிதான் அதிகம் இருக்கவேண்டும்.

அந்த ஒளியினைத் தந்திடும் வல்லமை உனக்கு உண்டு என்பதால்தானே தம்பி! நான் அன்புடன் அழைத்தவண்ணம் இருக்கிறேன், ஒளிப்படைத்த கண்ணிஞய்! வா! வா! வா! என்று.

அண்ணன்,

அண்ணதுரை

16-10-66

தொடர் கதை :

# மெல்லிய காதல்

புலவர் தி. நா. அறிவுஒளி

"வாழ்வின் இனிமைகளை, யாழ் வடித்துத்தரும் இசையின்பம் போல் அவர் வடித்துத் தருவார். அவர் மனங் கோணுதபடி பொன்போல அவரைப் போற்றி வாழவேண்டும்! அமைதிப் பண்புடைய அவர் நினைவிலே எவ்வளவு இன்பம்! உங்கள் நெஞ்சு நேர்ந்த முதற் பெண் நான் என நினைக்கும்போது எனக்குப் பெருமையாக இருக்கிறது அத்தான். நெஞ்சைக் குலுக்கும் மாயவன் அவர்! அவர் அன்பிலே ஊறி—ஆ!..."

இளமையுணர்வின் இனிமைக் கூத்துகள் எத்தனைவகை!

நெஞ்சை ஈர்க்கும் நினைவுகளைத்தான் இளமைப் பருவத்தினர் எண்ண விரும்புகின்றனர்! அதிலும், காதலும், திருமண உணர்வும் மலர்ந்த உள்ளத்தினர் அவ்வுணர்வினின்று விடுதலை பெறுவதில்லை.

வெள்ளிவீதியின் கன்னத்தைக் குறும்பாக அவள் கூந்தல் வருடியது. செல்லமாக அதை ஒதுக்கி விட்டுக் கொண்டாள்.

மக்களின் கற்பனை அளவுக்கு மீறியே அமைகிறது. ஆனால்,

உண்மையோ?

உறக்கத்தினின்றும் விழித்தெழுந்தான் முகிலன்.

வெள்ளிவீதி தன்னைமறந்த உணர்வில் திளைத் திருப்பதைப் பார்த்தான்.

இளஞ்சிரிப்பு அவனிதழை அணி செய்தது. மீண்டும் படுத்துக்கொண்டான்.

## 44

முகிலனின் உதவியால் அறச் செல்வன் பணிமனையில் எழுத்தர் பணியில் சேர்ந்து பணியாற்றி வந்தான்.

எளிமையின் வடிவமாக அவன் விளங்கினான். போலி மினுமினுப்பும் ஆரவாரம் போக்கும் அவனிடம் இல்லை.

பிறமொழிச் சொற்களைக் கலவாது தூயமொழி நடையில் பேசுவதும் எழுதுவதும் அவனியல்பாக விருந்தது.

அதனால் அவன் ஒரு வியப்புக்குரியவனாக விளங்கினான்.

அவன் பேச்செல்லாம் இலக்கியமாக இருந்ததால், அவன் பேசும்போது பலரும் ஆவலோடும் ஆர்வத்தோடும் அவனைக் கவனிப்பது வழக்கமாயிருந்தது. எப்போதும் திருக்குறள், எட்டுத்தொகை, பத்துப்பாட்டு நூல்களைக் கையில் வைத்திருந்து வாய்ப்பு நேரும்போதெல்லாம் படித்துத் திளைப்பான் அறச்செல்வன்.

"அவர் தமிழ்ப் புலவரப்பா!"

"அறச் செல்வனா? பிழைக்கத் தெரியாதவன்"

"பித்தன்!"

"துப்புக்கெட்டவன்!"

"ஏட்டுச் சுரைக்காய்!"

"உண்மை, நேர்மை, அறம், உரிமை, தமிழ், பண்பு என்று பெரிய பேச்சுத்தான் பேசுவான்! கையிலே செல்லாக்காசு கிடையாது! காசில்லாதவனுக்குப் பேச்சு ஏன்?...என்று அறச் செல்வனைக் குறித்து அலுவலகத்தில் திறனாய்வுரைகள் 'அடிப்படும்'"

இவைபற்றி அறச் செல்வன் கவலைப்படுவதில்லை. "நம்மைப் புகழவும், இகழவும் பிறர்க்குரிமை யுண்டு. புகழை விரும்புவது போல இகழைப் பொறுப்பதும் நம் கடமையாகும்." எனக் கருதி இயங்குவான் அறச் செல்வன்.

விடியற்காலை.

ஊருக்கு வெளியே உள்ள கிணற்றுக்குக் குளிக்கச் சென்றான் அறச் செல்வன். அவன் வாய்," அன்பீனும் ஆர்வமுடைமை, அது ஈனும் நண்பு என்னும் நாடாச் சிறப்பு. ஆகா! என்ன அருமை! அன்பு...ஈனும்...ஆர்வமுடைமை! அடடா! அடடா!" எனக் குறள் மொழிகளைக் கூறியது. அதன் இனிமையை அணு அணுவாக ஆராய்ந்து சுவைத்தும், உள்ளத்துள் உணர்ந்தும் அவன் துய்த்தான்.

குளித்து, துணி துவைத்துப் பின்புறப்பட்டான். அவன் வாய் குறுந்தொகைப் பாட்டின் இன்பத்தில் திளைத்தது.

"இல்லோன் இன்பங் காமுற் றுங்கு
அரிது வேட்டானையால் நெஞ்சே! காதலி
நல்லள் ஆகுதல் அறிந்தாங்கு
அரியள் ஆகுதல் அறியாதோயே."

[குறுந்தொகை-120-பரணர்]

பாடலின் இலக்கிய நயம், சொல்லின் இனிமை எழில், பொருள் நலம் ஆகியவற்றை வியந்து வியந்து உணர்ந்து சுவைத்தான் அறச் செல்வன்.

வீடு சேர்ந்தான்.

வள்ளுவர் ஓவியத்தை வணங்கினான்.

அறச்செல்வனின் தம்பியார் ஆட்டனத்தியும், கபிலனும் அவனோடு இணைந்து 'சால்புடைமை' அதிகாரத்தை உள்ளுவந்து ஓதினர்.

# வாழ்க்கைக்கு ஒரு பாடம்!

**எறும்புகளும் நமக்கு அறிவு புகட்டுகின்றன!**

## சேமிப்புப் பழக்கமே எதிர்காலத்திற்கு ஆக்கம் தரும்.

**சிறு சேமிப்புத் தரும் சிறப்பான திட்டங்களில் இரண்டு, தொடர்வைப்புத் தொகை திட்டமும் (ரெகரிங் டெபாசிட் திட்டமும்), வளரும் மாதச் சேமிப்புத் திட்டமும் ஆகும்.**

| | மாதம் செலுத்தும் தொகை | 5 ஆண்டு இறுதியில் கிடைப்பது |
|---|---|---|
| ரெகரிங் டிபாசிட் ... | ரூ. 5 | ரூ. 355 |
| | ரூ. 10 | ரூ. 710 |
| வளரும் மாதச் சேமிப்பு ... | ரூ. 5 | ரூ. 337.50 |
| | ரூ. 10 | ரூ. 675.00 |

தற்போது, 1-7-72 முதல் இந்த இரு திட்டங்களுக்கும் புதிய சலுகை வழங்குகிறது, சிறு சேமிப்பு நிறுவனம். இந்தத் தேதிக்குப் பின்னர் இந்தத் திட்டங்களின் கீழ், கணக்குத் துவக்குபவர்கள் எதிர்பாராதவிதமாக மரணமடைய நேரிட்டால் 5 ஆண்டு இறுதியில் கிடைக்க வேண்டிய தொகை முழுவதும் உடனடியாக அவர்களது வாரிசுக்குக் கிடைக்கும்.

**இந்த ஈட்டுறுதிச் சலுகையை வேறு எந்தச் சேமிப்புத் திட்டமும் அளிப்பதில்லை.**

**இன்றே ஒரு சிறு சேமிப்புக் கணக்கு துவங்குங்கள்.**

**சிறு சேமிப்புத் துறை,**
**தமிழ்நாடு அரசு.**


அறச்செல்வனின் அன்னையார் தமிழ்க் கொடி மூவருக்கும் பழையமுதைப் படைத்தார். மெல்லெனப் பேசியவாறு உண்ணலாயினர்.

ஐம்பது வயதான தமிழ்க்கொடியார் முதுமையின் வரிவடிவங்களைத் தாங்கியும் எழுச்சி குன்றாமல் விளங்கினார். பரந்த நெற்றியில் சிவந்த பொட்டு துலங்கியது. மஞ்சளின் வண்ணம்மீது மினுத்த முகம், கைகால்களில் ஒரு தனிப்பொலிவும் கண்ணியமும் மிளிர்ந்தது.

"அப்பா அறம், இன்று மாலை அலுவலகத்திலிருந்து வரும்போது அரிசி வாங்கி வா, நல்ல அரிசியாக வாங்கி வாப்பா," என்றார் தமிழ்க் கொடி;

அறச்செல்வன் தன் அன்னையை நிமிர்ந்து பார்த்தான்.

ஒளி தவழும் தோற்றத்தினரான தமிழ்க் கொடியின் தாய்மையும் பெண்மையும் தவழும் முகத்தில் அன்பும் அமைதியும் நிலவக் கண்டான்.

"என்னம்மா? அதற்குள் அரிசி தீர்ந்துவிட்டதா? சம்பளம் வர இன்னம் ஐந்தாறு நாட்கள் இருக்கின்றனவே?" என்றான் வருத்தம் தோய்ந்த குரலில்,

:'இன்று நம் வீட்டிற்கு விருந்தினர் வர இருக்கின்றனர்..."

"யார் அம்மா?"

"பட்டிணத்திலிருந்து அதியமான் என்பவர் வரப்போகிறார். அப்பா உன்னிடம் சொல்லவில்லையா? நூலகத் துறையில் தலைமையலுவலராக இருக்கின்றார். அவரும் அவர் மனைவி பொற்றொடியாரும் வருவார்கள்."

"இதுவரை வந்ததில்லை போலிருக்கிறதே?"

"ஆமாம். ஆனால், நம் உறவினர்தான், உன்னைப் பார்க்க வருகிறார்கள் அப்பா. அதிகமானுக்கு ஒரு பெண் இருக்கிறாள். செல்வி என்று பெயர். அவளுக்கும் உனக்கும் திருமணம் முடிந்தால் நமக்கு மிகவும் நல்வாய்ப்பாக இருக்கும்!"

"அம்மா!"

"என்ன அறம்?"

"எனக்கு இப்போது எதற்கம்மா திருமணம்? தம்பிகளின் படிப்பெல்லாம் முடியட்டுமே! நம்வீட்டின் மீதிருக்கும் மலைபோன்ற கடன்வேறு மாளாமல் இருக்கிறது! மீண்டும் கடன்பட்டுத் திருமணத்தைச் செய்து, மேன்மேலும் சுமையை ஏற்றிக் கொள்வது வருந்தத்தக்கதம்மா."

"அறம், கடன் இருக்கும்; போகும். தக்ககாலத்தில் செய்யவேண்டிய கடமைகளை அதற்ககாகப் புறக்கணிக்க முடியுமா? நம் வீட்டில் விளக்கேற்றி வைக்க ஓர் இளம் பெண் வேண்டுமே!"

(வளரும்)

குறுநாவல்:

# மறு வாழ்வு!

இளங்கீரன்

மனித வாழ்வில் பதினாறும் வயது சிக்கல் நிறைந்த முக்கிய கட்டமாகும். அந்த வயதிலே தான் மனிதன் பிள்ளைப் பருவம் தாண்டி வாழ்வின் சனதப்பற்றான வாலிபப் பருவத்தை அடைகிறான். அந்த நாளில் அவன் எந்த இலட்சியத்தைத் தன் மனதில் எண்ணிக் கொள்கிறானோ அதுவே வளர்ந்து நிலைத்து பலன் கொடுக்கும். முத்துவைப் பொறுத்த வரையில் அது உண்மையாக ஆகிவிட்டது.

பழைய ஏட்டுப் பிரதிகளையும் சித்த வைத்தியப் புத்தகத்தையும் தேடி எடுத்துத்தானே படிக்கத் துவங்கினார். மெல்ல மெல்ல வீட்டை மறந்தார். மலையடிவாரமும் மர நிழலும் அவர் மனதில் அமைதியை ஏற்படுத்தின. அவரையும் அவரைச் சூழ்ந்த உலகையும் அவை மறக்கச் செய்தன. பக்தி அவரைப்பற்றிக் கொண்டது.

கேரளாவிலுள்ள சபரிமலை ஐயப்பனை நாடிச் செல்லும் பக்கத்து ஊர் பக்தர்கள் முத்துவையும் அழைத்தார்கள். அவர்களைப்போல் அவரும் நாற்பது நாட்கள் கடும்விரதம் இருந்து மும்முடிகட்டி சபரிமலை ஏறி ஐயப்பனைத் தரிசித்து வந்தார். அதைத் தொடர்ந்து ஒவ்வொரு ஆண்டும் மார்கழி மாதம் சபரிமலை சென்று வந்தார்.

புதிதாகச் சபரிமலை செல்ல மாலை போடும் இளம் ஐயப்பன்களுக்கு முத்துவே குரு சாமியாக இருந்தார். அதனால் ஊர் மக்கள் எல்லோரும் அவரைச் "சாமி, சாமி" என்று அழைத்து மரியாதை செலுத்தி வந்தார்கள். தங்களைவிட அவர் வயதில் இளையவராக இருந்தாலும் அவரிடம் குடிகொண்டிருந்த பக்தியையே அவர்கள் பெரிதாக மதித்து வந்தார்கள்.

தங்கக் கூண்டென்றாலும் அதனுள்ளே அடைபட்டுக் கிடக்கக் கிளி விரும்புமா? சோலையிலே மேய்ந்து வான வீதியிலே பறந்து சுதந்திரமாகத் திரியத்தான் அது விரும்பும்.

ஊர் மக்கள் எவ்வளவோ மரியாதை கொடுத்தும் முத்துவால் அந்த ஊரிலேயே அடைப்பட்டுக் கிடக்க முடியவில்லை. வெட்டவெளிப் பொட்டலில் நடந்தும் தொலைதூர மலைமேல் ஏறியும் தான் கற்ற சித்த வைத்தியத்தில் குறிப்பிடப்பட்டுள்ள மூலிகை, பச்சிலை வேர் ஆகியவற்றின் சக்தியைக் கண்டறியவும் அவர் விரும்பினார். அதற்காக அருகிலுள்ள கன்னிகாபுரத்து மலைக்குச் சென்றார். இரண்டொரு நாட்கள் அங்கு தங்கினார். ஆனால் அவர் எதிர்நார்த்த மூலிகைகளும் அமைதியும் அங்கு கிடைக்கவில்லை.

அதை விட்டுத் திருச்சியை அடுத்த கொல்லி

மலைக்குச் சென்றார். அங்கும் அவருக்கு அமைதி கிட்டவில்லை.

சபரிமலைக்குச் செல்லும்போதும் சென்று திரும்பும் போதும் குற்றாலம் அருவியில் அவர் நீராடியதுண்டு. அருவிக் கரையிலும் அதையடுத்த கடைவீதிகளிலும் சிலர் மூலிகைகளையும் வேர்களையும் வைத்து விற்பனை செய்வதைப் பார்த்த அவருக்கு நினைவு வந்தது. உடனே அவர் குற்றாலம் மலைக்குச் செல்ல முடிவு செய்தார்.

## 3

குற்றாலம் திரிகூட மலையிலுள்ள செண்பகாதேவி அருவிப் பக்கம் சென்ற முத்து அந்த இடங்களைச் சுற்றிப் பார்த்தார். அங்குள்ள மலைக்குகைகள் அவர் மனதைக் கவர்ந்தன. அவற்றில்ஒன்றைச் சுத்தம் செய்து இரண்டு நாட்கள் அதில் தங்கினார். மற்ற மலைகளில் இல்லாத நீர் வசதியும் மூலிகைகளும் அங்கு இருக்கக் கண்டதால் அந்தக் குகையிலேயே நிரந்தரமாகத் தங்கி வரலானார்.

காட்டுப் பறவைகள் கூட்டை விட்டுப்பாடிப் பறந்து இன்னிசை எழுப்பும் அதிகாலை நேரத்திலேயே தினமும் முத்து எழுந்து விடுவார். தெளிந்து,— பாறைமீது வழிந்து ஓடும் குளிர்ந்த நீரில் குளித்தெழுந்து காலைப் பூசையை முடிப்பார். உணவை முடித்தவுடன் ஆற்றின் மத்தியிலுள்ள பாறைக்கு வருவார். அதிலிருந்தபடியே ஆற்று நீரின் ஓட்டத்தையும் அதில் துள்ளியோடும் மீன்களின் ஆட்டத்தையும் தன்னை மறந்து பார்த்துக் கொண்டே இருப்பார். அதன் பிறகு காடுகளை எல்லாம் சுற்றி வருவார். அங்கு கிடைக்கும் பச்சிலை, வேர், மூலிகை ஆகியவற்றைச் சேகரித்து வருவார். குகையிலமர்ந்து, சித்த வைத்தியத்தில் கூறியுள்ள குணங்கள் அவற்றில் இருக்கின்றனவா என்பதை ஆராய்ந்து அறிவார்.

இப்படியே தினமும் ஆராய்ந்து மருந்துக்கள் செய்யவும் தெரிந்து கொண்டார். அவர் தேடியலைந்த கண்கண்ட பச்சிலை கற்பூரவல்லி இலையிலிருந்து குழந்தைகளுக்கு ஏற்படும் கபம், காய்ச்சல் முதலியவற்றைக் குணப்படுத்தும் செந்தூரம் செய்தார். வெட்டி வந்த வேர்களிருந்து இலேகியம் செய்தார். சுருக்கமாகச் சொன்னால் சித்தவைத்தியம் அவருக்குப் பல பாடமாயிற்று.

சித்தர்களைப் போலவே காடுகளில் கிடைக்கும் கனி, கிழங்கு, தேன் ஆகியவற்றை உண்பதற்கும் பழகிக் கொண்டார். நண்பகலில் மட்டும் சோறு சாப்பிட்டு வந்தார். இதற்காகச் செண்பகாதேவியம்மன் கோயில் பூசாரியைத் தெரிந்து வைத்திருந்தார். கோயிலில் தயாராகும் புளியோதரை, பொங்கல் ஆகியவற்றைப் பூசாரி கொடுத்து

வந்தார். அரிசி கிடைத்தால் தானே சமைத்து சாப்பிட்டுக் கொள்வார்.

சிந்தை குளிர்விக்கும் செண்பக அடவியில் உலவி சித்றியோடும் ஆற்று நீரில் நீந்தி தெரிந்த மருந்து களைத்தானே தயார் செய்து குகையிலிருந்து தியானம் செய்து தனிமையில் இனிமைகண்டு மனம் விரும்பிய வாழ்வு வாழ்ந்து வந்தார், முத்து.

செண்பகா தேவி அருவிக்கு வருகிறவர்களும் அதைத் தாண்டித் தேனருவிக்குச் செல்கிறவர்களும் விறகு வெட்டவும் தோட்டவேலைக்குப் போகிறவர் களும் தனிமையில் குகையில் வாழும் முத்துவைக் கண்டார்கள். 'கருகரு,வென்று வளர்ந்திருந்த தாடியையும் சடா முடியையும் தவக்கோலத்தையும் கண்டவர்கள் 'இவர் பழங்காலத்து முனிபுங்கவரோ!' என்று பயபக்தியுடன் அவரை அணுகினார்கள். 'குகைச்சாமி' என்றழைத்துத் தனிமரியாதையும் காட்டினார்கள். அவரைப் பக்தர்கள் தினமும் பார்க்க வந்தார்கள்.

தன்னைப் பார்க்கவரும் பக்தர்களுக்கு விபூதியும் மருந்தும் கொடுத்தார். மருந்தின் பலனால் குண மடைந்தவர்கள் பணமாகவும், துணிமணியாகவும், அரிசி, பருப்பு, காய்கறியாகவும் அவருக்குக் காணிக்கை கொடுத்தார்கள்.

அவர்கள் தரும் துணிமணி உணவுப் பண்டங் கள் ஆகியவற்றை மட்டும் வாங்கிக் கொண்டு அவர் பணத்தை வாங்க மறுத்துவிடுவார். அதற்குப் பதில் கடைகளிலே கி[illegible]கும் உலோகப் பொருள் களை வாங்கி வரச் செ[illegible] இலேகியம், செந்தூரம், சூரணம் ஆகிய மருந்[illegible] தயார் செய்து பக்தர் களுக்கே கொடுத்துவ[illegible]

பணம் வாங்க ம[illegible]தையும் நோய் தீர்க்கும் மருந்துச் சக்தி இருப்[illegible]தையும் அறிந்த மக்கள் முத்துவைப் பெரிய மகான் என்று போற்றினார்கள். யாருக்காவது வியாதி இருப்பதைக் கண்டால் "செண்பகா தேவி குகைச் சாமியிடம் போங்கள்; நல்ல மருந்து தருவார்; உடனே வியாதி குணமாகும்" என்று அவரைப் பார்த்தவர்கள் சிபாரிசு செய்வார்கள்.

நோயாளிகளும் பணம் படைத்த சீமான்களும் தினமும் குகைச் சாமியைத் தரிசித்து வந்தார்கள்.

மக்களின் பெருமதிப்பையும் மனநிம்மதியையும் பெற்றுப் பத்து ஆண்டுகளைத் தனிமைக் குகையில் கழித்து வந்தார், முத்து. இப்படியே தனது வாழ் நாளெல்லாம் கழிந்துவிடும் என்ற எண்ணத்தில் எதிர்கால சிந்தனை எதுவும் இல்லாமல் இருந்து வந்தார்.

ஒருநாள் அந்தி நேரம். காலாரச் சிறிது உலாவி விட்டுக் குகைக்குத் திரும்பிக் கொண்டிருந் தார், முத்து. சற்று தூரத்தில் "ஐயோ! அம்மா!" என்ற அழுகுரலும், "என்னைக் காப்பாத்த யாரு மில்லையா?" என்ற அபயக்குரலும் கேட்டது. பத்து ஆண்டுகளாகக் கேட்காத புதிய ஒரு குரலைக் கேட்ட தும் அவர் திடுக்கிட்டு நின்றார். அழுகுரல் நிற்கவே இல்லை. குரல் வந்த திக்கை நோக்கி நடந்தார்.

அங்கே, ஒரு பெண் கீழே விழுந்து கிடந்தாள். அருகில் சென்று பார்த்தபோது, அவள் காலில் வெட்டுப்பட்டு இரத்தம் ஒழுகிக் கொண்டிருந்தது. வேதனை தாங்காது அவள் அழுது அரற்றினாள்.

"யாரம்மா நீ? என்ன இதெல்லாம்?"—வியப் போடு அவளிடம் கேட்டார் முத்து.

"சாமி! நீங்கதான் என்னக் காப்பாத்தனும்! வெறகு வெட்ட வந்தேன். கை தவறிக் கால்ல அரிவாள் பட்டு ரத்தம் ஆறு ஓடுது! வலிதாங்க முடியல்லேயே, சாமி!" என்று அழுது கொண்டே அவள் பதில் சொன்னாள். ஆள் நடமாட்டம் எதுவும் இல்லாத நடுக்காட்டில் அவரைப் பார்த்த தும் அவளுக்கு ஆறுதலாகவும் ஆனந்தமாகவும் இருந்தது.

"அழாதே, அழாதே! கொஞ்சம் பொறு, இதோ வருகிறேன்" என்று சொல்லிக்கொண்டே சிறிது தூரம் வேகமாகக் காட்டுக்குள் சென்றார். பிறகு சில பச்சிலைகளைப் பறித்துக் கைகளில் வைத்துக் கசக்கிக் கொண்டு வந்தார். அதிலிருந்த சாற்றைப் பிழிந்து வெட்டுக்காயத்தில் விட்டார். தன்னிட மிருந்த துணியை எடுத்து, காயத்தைச் சுற்றிக் கசிந்திருந்த இரத்தத்தைத் துடைத்துச் சுத்தம் செய்தார். சாறுபட்ட சிறிது நேரத்திற்குள் இரத்த ஒழுக்கு நின்றது. அந்தப் பெண்ணுக்கு மகிழ்ச்சி கரைகாணாமல் பெருகியது.

"சாமி! சாமி! நீங்க நல்லா இருக்கனும்!" என்று அவரைப் பார்த்து இருகரம் குவித்து வணங்கினாள்.

"அதிருக்கட்டுமா! நான் கொண்டுவந்த பச்சிலைக்கு இரத்தத்தை நிறுத்தும் சக்தி மட்டும் தான் உண்டு. ஆனால் உன் காயம் பலமானதா யிற்றே! இப்படியே விட்டுவிட்டால் சீழ் வைத்துப் பெரிய புண்ணாகிவிடும். குகைக்கு வந்தால் நல்ல மருந்து இருக்கிறது...!" என்று இழுத்தார். அதற்குள் அவள் எதையோ காணாததைக் கண்டு விட்டவள்போல், "சாமி! நீங்கதான் செண்பகா தேவி குகைச் சாமியா? ஒங்களப்பத்தி ஊரெல்லாம் பேசுது நேத்துக்கூட மேல வீட்டு நீலமதியக்கா சொன்னா! தீராத வியாதி எல்லாம் கொணப்படுத்தும் குகைச்சாமியைப் பார்க்கணும்னு. இப்போ நீங்களே எம்முன்னால தெய்வம்போல வந்திட்டீங்க..." என்று வெட்டுக்காயம் தந்த வேதனையையும் மறந்து விட்டுப் பேசினாள்.

அதெல்லாம் பிறகு பேசிக் கொள்ளலாம். "குகையிலிருக்கும் மருந்தை மூன்றுவேளை இட்டால், புண் இருந்த இடம் தெரியாமல் மறைந்து விடும்." என்று அவளது புகழ் மொழிக்குச் செவிசாய்க்காமல் சற்றுநேரம் சிந்தித்துவிட்டு "உன்னால் குகை வரை வரமுடியுமா?" என்று அவளைக் கேட்டார்.

"சாமி! தினம் வெறகு வித்துப் பிழைக்கக் கூடியவ நான்; எம்புண்ணு ஆறும்னா நான் எங்க வேணுமானாலும் வருவேன்."

"உன்னால் நடக்க முடியுமா?"

"நடக்க முடியல்லேன்னா தவழ்ந்துகூட வந்திடு வேன்."

அவளுடைய துடுக்கான வார்த்தைகளைக் கேட்ட முத்து தனக்குள்ளேயே நகைத்துக் கொண்டார். அவளைப் பார்த்து "என் பின்னால் வா" என்று வாய் திறந்து அழைக்காமல் கையால் சைகை காட்டி விட்டுத் திரும்பினார்.

(வளரும்)

# நமக்கும் நல்லது! நாட்டுக்கும் நல்லது!



## பன்னிரண்டு ஆண்டுகளி[illegible] வருவாய் இரட்டிப்பாகிட தமிழக மாநிலத் திட்டக் குழுவின் திட்[illegible]கள்

சமதர்ம சமுதாய அமைப்புக்கு வழிவகுக்கும்
நிலச் சீர்திருத்தம்!
வழித் தடங்கள் நாட்டுடமை!
ஏழை எளிய மக்களுக்கு
இலவச வீட்டுமனை! நிலப் பட்டா!
பிற்படுத்தப்பட்ட மக்களுக்கு
உதவிகள்! சலுகைகள்!
பிச்சைக்காரருக்கு மறுவாழ்வு!
குடிசைமாற்று வாரியம்!
கண்ணொளி வழங்கும் திட்டம்!

இப்படி நமது அரசு ஆற்றிடும் பணிகளால்
புதிய வாழ்வு மலர்ந்திட
நாம் செய்ய வேண்டிய கைமாறுதான்

**குடும்பநலத் திட்டம்**

பெருகிடும் மக்கள் தொகையே
இன்றைய பெரும் பிரச்சினை!
எனவே
திட்டமிட்ட குடும்பம்:—
நமக்கும் நல்லது! நாட்டுக்கும் நல்லது!

## அடுத்த குழந்தை இப்போது வேண்டாம்! இரண்டுக்குப் பிறகு எப்போதும் வேண்டாம்!

குடும்ப நலத்துறை,
தமிழ்நாடு அரசு.

ஆசிரியர் வெளியிடுபவர் சி. என். ஏ. இளங்கோவன் அவர்களால், காஞ்சிபுரம்-3,
86. திருக்கச்சிநம்பித் தெரு, கல்கி அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்படுகிறது.